Registered as a News Paper in Ceylca

★ ★

விலை சதம் 15

உங்கள் பற்றறி றேடியோக்களை
ரான்ஸிஸ்டர்
றேடியோக்களாக மாற்ற
விரும்புகிறீர்களா?
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
V.K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

முக்கிய அறிவித்தல்
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு
திருக்கேதீஸ்வர ஆலய வீதியில்
அமைந்திருக்கும் எமது விளம்பர
வாகனத்தில் 1-50 சதம் கொடுத்து
1 கப் அண்ணா கோப்பி
வாங்கும் அன்பர்களுக்கு
1 பொலிதீன் பாக்
1 பக்கட் அண்ணா பற்பொடி
1 கலண்டர்
இனமாக வழங்கப்படும்.
அண்ணா தொழிற்சாலை
இனுவில்

மலர் 13 மாசி 1 ஜுஹறஜ் 25 (22—2—71) திங்கட்கிழமை இதழ் 13

## வருடமொன்றுக்கு

# விசாவரி மூலம் ரூ. 30 லட்சம்

## புதியசட்டம நிறைவேறியது

கொழும்பு, ஞாயிறு

**தற்காலிக வாசகால அனுமதிப்பத்திரம் வைத்திருப்போர் மீதான புதிய வரிச்சட்டத்தின் மூலம் வருடமொன்றுக்கு 30 லட்சம் ரூபாய் கிடைக்கும்.**

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் இந்தத் தகவலை வெளியிட்டார். தற்கால வாசகால பர்மிட் வைத்திருப்போர் மீதான புதிய வரிச் சட்ட மூலம் இன்று ஆட்சிமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

மூன்று மாத காலத்துக்கோ, அதற்குமேற்பட்ட காலத்துக்கோ வாசகால 'பர்மிட்' வைத்திருக்கும் இலங்கையரல்லாதவர்களுக்கு வருடமொன்றுக்கு 500 ரூபாய் வரி அறவிடுவதற்கு இந்த சட்ட மூலம் வழி வகுக்கிறது.

1960ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டுவரை இந்த வரி அறவிடப்பட்டுவந்துள்ளதென்றும், இதன் மூலம் அப்போது 1 கோடி ரூபாய் கிடைத்ததென்றும், ஆனல் கடந்தகால அரசாங்கம் இதனை அறவிடாது நீக்கிவிட்டதென்றும் பிரதமர் பேசுகையில் தெரிவித்தார்.

தற்காலிக வாசகால பர்மிட் வைத்திருப்போர் இலவசமருத்துவம், கல்வி ஆகியனவற்றை அனுபவித்து வருகிறார்களென்றும்; இவர்கள் மீது வரி அறவிடப்படுவது நியாயமானதென்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

குருமார்களுக்கு இந்த விதியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமென்றும் பிரதமர் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

### அறிக்கை

இன்று ஆட்சிமன்றத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா சிங்கப்பூரில் நடைபெற்ற சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டவை பற்றிய அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தார்:

---

யாழ்ப்பாணக் கல்லூரிகளிலிருந்து

## வர்த்தகப்பட்டம்பெற 17 மாணவர் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

வித்தியோதய பல்கலைக் கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வர்த்தகப் பட்டதாரிகள் வகுப்பிற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்லூரியிலிருந்து 17 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரி: என். முகமதுஅலி, எம். எம். எம். சபுன்றுதீன், எஸ். அருணானந்தநாதன், எஸ். ரகுலேந்திரன், ரி. சிறிசெல்வராசா, ஞானச்சந்திரன், சிவராசா, குகனேந்திரன், என். புலேந்திரன். கொக்குவில் இந்துக்கல்லூரி: க. தேவராஜா, கு. வன்னியசிங்கம், க.வேலாயுதம், கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம்: எஸ். மனோன்மணி, எம். சி. சமரக்கோன், ஐ. கோபாலகிருஷ்ணன், வி தங்கராஜா, ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி: க. சுந்தரலிங்கம்.

இவர்களுக்கான வகுப்புக்கள் இம்மாதம் 25-ந் திகதி ஆரம்பமாகிறது.

---

## 'வடக்கு பல்கலைக்கழகத்தில் 3மொழி போதனைவேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் அமைப்பது சம்பந்தமாக யாழ். நுண்கலைக் கழகம் மகஜர்ஒன்றை தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியருக்கு அனுப்பி வைத்துள்ளது.

வடபகுதியில் பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதைப் பாராட்டி, இது அரசாங்கத்தின் சோஷலிஸத் திட்டத்தை வெளிப்படையாகக்காட்டுகிறது என்று நுண்கலைக் கழகம் தன்துமகஜரில் குறிப்பிட்டுள்ளது.

வடபகுதியில் அமையவிருக்கும் பல்கலைக் கழகத்தில் பின்வருவன இடம் பெறவேண்டும் என்று இவர்கள் கோரியுள்ளனர்.

"உத்தேச பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட ஒரு மொழியில் மட்டுமே கல்வி போதிக்கப்படக்கூடாது தேசிய மொழியான சிங்களம், பிராந்திய மொழியான தமிழ், சர்வதேச மொழியான ஆங்கிலம் ஆகியனவற்றில் இங்கு கல்விகற்க வசதி செய்ய வேண்டும். இங்கு சமஸ்கிருதமும் போதிக்கப்படவேண்டும். இது கர்நாடக சங்கீதம் போன்ற நுண்கலைகளும் சுதேச வைத்தியக் கல்விக்கும் அதிமுக்கியமானது. எனவே சமஸ்கிருதமும் இங்கு போதிக்கப்படவேண்டும்.

சகல பிரிவுகளும் இந்தப் பல்கலைக் கழகத்தில் அமையலாம். வைத்தியம், விஞ்ஞானம், பொறியியல், கலை மற்றும் தசதிமார் பயிற்சி போன்ற சகல பிரிவுகளையும் இங்கேயே நிறுவலாம். சங்கீதம், நடனம் சுதேச நாடகங்கள், போன்ற நுண்கலைகளை இந்தப் பல்கலைக் கழகம் மூலமாகப் பேணிக்காக்கமுடியும். இப்போது இராமநாதன் மியூசிக் அக்கடமி இத்தொண்டினைப் புரிந்துவருகிறது.

— —

மன்னார் தேர்தல் வழக்கு

## தீர்ப்பை எதிர்த்து அப்பீல்

மன்னார், ஞாயிறு

மன்னார் தேர்தல்ஆட்சேப வழக்கு தீர்ப்பை எதிர்த்து மனுதாரரான திரு. எஸ். அப்துல்ரஹீம் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்துள்ளார்.

மன்னார் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினராக தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு, வி. ஏ. அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து திரு. எஸ். அப்துல்ரஹீமினல் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதியரசர் திரு. வி. ரி, தாமோதரம், செலவுதொகையுடன் தள்ளுபடி செய்திருந்தார்.

---

## கருத்தரங்கு

கொழும்பு, திங்கள்

அனைத்துலகதமிழாராய்ச்சி மன்றத்தின் புத்தக நூற்காட்சியையொட்டிகொழும்பில் இன்று நடந்த கருத்தரங்கு ஒன்றில் வித்தியோதய பல்கலைக்கழக விரிவுரையாளர் கே. சிவத்தம்பி ஆக்க இலக்கியங்கள் பற்றி சொற்பொழிவாற்றினர். பேராசிரியர் குலரத்தினம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கை அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை ஏற்பாடு செய்திருந்தது.

— —

## 'அமிர்' தமிழகம் பயணமானர்

சுழிபுரம், ஞாயிறு

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ.அமிர்தலிங்கம் நேற்றுக் காலை விமான மூலம் சென்னைக்கு பயணமானர்.

திரு. அமிர்தலிங்கம், ஒரு வார காலம் அங்கு தங்கியிருப்பார். என்று தெரிகிறது.

---

1-வது டெஸ்ட் கிரிக்கெட்

## சர்தேசாய் புதியசாதனை இந்தியா கோஷ்டி -387

கிங்ஸ்டன், பெப். 21

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும், இந்தியா கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் ஜமேக்காவில் நடைபெறும் 1-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 3-வது நாளான இன்று இந்தியாக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 387 ஓட்டங்களைப் பெற்றது. இன்றைய ஆட்ட இறுதியின் போது மேற்கிந்தியக் கோஷ்டி விக்கெட் நஷ்டமின்றி 36 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியாக் கோஷ்டியின் வீரர் சர்தேசாய் 212 ஓட்டங்களை எடுத்து ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தினர். மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில் 1962-ம் ஆண்டில் ட்ரினிடாட்டில் நடைபெற்ற போட்டியில் இந்திய வீரர் உம்பிறிகர் 172 ஓட்டங்களைப் பெற்று ஒரு சாதனையை ஏற்படுத்தியிருந்தார்.

வீரர் சர்தேசாய் இன்றைய ஆட்டத்தில் 212 ஓட்டங்களைப் பெற்றது ஒரு புதிய சாதனையாகக் கருதப்படுகின்றது.

இந்த ஆட்டத்தின் ஆரம்பத்தில் இந்தியாக் கோஷ்டி 5 விக்கெட்டுகளை இழந்து ஆக 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்பின் அடுப்பெடுத்தாடிய வீரர்களான சர்தேசாயும், சோல்காட்டும், பிரஸ்ஸன்னவும் மிகவும் நிதானமாகவும், வேகமாகவும் ஓட்டங்களை எடுத்தனர்.

இந்தியாக் கோஷ்டி ஆட்ட இறுதியில் 387 ஓட்டங்களை எடுத்தது பாராட்டுதலுக்குரியதாகும், என கிரிக்கெட் வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

---

## விளக்கினல் விபத்து: 8 வயதுச் சிறுமி பலி

யாழ்ப்பாணம், திங்கள்

தகரவிளக்கு தட்டுப்பட்டதால், ஏற்பட்ட தீ விபத்தினல் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நாகராசா பெண் நேசம்மா (வயது 8) மரணமானர்.

சேலையில் தீப்பிடித்ததைத் தொடர்ந்து எரிகாயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு. பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் மரணமானதாக விசாரணையில் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. என் இராசநாயகம், விசாரணையின் பின் விபத்தினல் ஏற்பட்ட மரணமென்று தீர்ப்பளித்தார்.

(வ. நி)

25 FEB 1971 UNDERGRADUATE LIBRARY

சுன்னாகம்
**நாகம்ஸ் சினிமா**
தினசரி 3 காட்சிகள்
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம்.ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
**நாடோடி**

REGAL Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya days 4 shows
Maximilian Schell
in
TOPKAPI
(Color)


## கிரிக்கெட்

### யாழ். இந்து வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் யாழ். இந்துக்கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி 6 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.
(தே-நி)


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி. ஆர்.- பி.எஸ். சரோஜா
வீரப்பா
நடித்த
**ஜெனேவா**
புதிய கொப்பி

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

6-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாதினங்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)



சிவாஜி
காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த



**சிவந்த மண்**


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 22—2—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 அதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

844 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நாணயசந்தை.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 நாட்டுப்பாடல்கள், 7-15 பாட்டு, 7-45 ஆ நா. சித்திரம், 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்தித் தொகுப்பு.

—— ——

## காணிக் கச்சேரி

முல்லைத்தீவு, ஞாயிறு
முத்தையன்கட்டு குடியேற்றத்திட்டத்தில் வழங்கவிருக்கும் காணிகளுக்கான காணிக்கச்சேரி முல்லைத்தீவு காரியாதிகாரி கந்தோரில வவுனியா காணி உத்தியோகத்தர் திரு தி. வேலுப்பிள்ளையினல் நடாத்தப்பட்டது. ஆயிரக் கணக்கான விண்ணப்பதாரர் சமூகமளித்திருந்தனர்.


வெலிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்-சாரதா
நடித்த
**துலாபாரம்**
(தமிழ்)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர். - ஜமுனா
நடித்த
**தாய் மகளுக்குக் கட்டிய தாலி**

MANOHARA
Jaffna
Daily 3 Shows
Chorlton Heston
Lee Majors
in
WILL PENNY
(Action film) -(Technicolor)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

குயின்ஸ் இன்குபேற்றர்கள் (Queens Incubators) நூறு முட்டைகள் அடைகட்டக்கூடியது. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். ஞானம் இன்டஸ்றியல் வேர்க்ஸ், பருத்தித்துறை. 2844

காணி;
ஆனைக்கோட்டை சந்தி மானிப்பாய் வீதியில் ஒழுங்கை முகப்பையுடைய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஆனந்தீஸ்வரன் சந்தி, ஆனைக்கோட்டை. 2842

### பயிற்சி

ஆர்மச்சர் மோட்டார் ரீவைண்டிங் மாலையில் பயிற்சி அளிக்கப்படும். விபரங்களுக்கு: இன்டஸ்றியல் கிராப்ட்ஸ் இன்ஸ்ரிரியூற், 443, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். 2848

### அடைவு நகைகள் ஏலவிற்பனவு விளம்பரம்

தொல்புரம் இ. துரையப்பா & சன்ஸ் அடைவு கடையில் 27-2-1969 தொடக்கம் 31-12-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 27-3-71 சனிக்கிழமை மு. ப 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்து பகிரங்க ஏலத்தில் என்னுல்விற்கப்படும்.

சி. செ. மாரிமுத்து.
Commissioner, Auctioneer & Valuer.

விதானை வளவு,
சித்தன்கேணி,
19-2-71 2785

## குருநாகல் கோஷ்டி யாழ் வருகிறது

யாழ்ப்பாணம், திங்கள்
குருநாகல் மாலியதேவா கல்லூரியின் கிரிக்கெட் கோஷ்டி இன்று யாழ்ப்பாணம் வருகின்றது. இக்கோஷ்டி யாழ் மத்திய கல்லூரியின் கிரிக்கெட் கோஷ்டியுடன் இருநாள் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும்.

குருநாகல் கோஷ்டிக்கு வீரர் காமினி பத்திராஜ தலைமை தாங்குகின்றார். யாழ் மத்திய கல்லூரிக் கோஷ்டிக்கு வீரர் எம். ஜெயக்குமார் தலைமை தாங்குகின்றார். மேற்படி இருகோஷ்டிகளுக்குமிடையிலான போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறும்.
(தே-நி)

பிஸ்கால் இல. 94/70

## பிஸ்கால் விற்பனை

இலக்கம் 2306

பிஸ்கால் ஆபிசில் வவுனியா பிரதி 1971 ஆம் ஆண்டு பெப்ரவரி 15-ந் திகதி.

1. காங்கேசு நல்லையா.
2. பெண் செல்லம்மா இருவரும், குமுளமுனை.

வழக்காளிகள்

கோட்டில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில்.

விரோதமாக

1. அகம்மது லெப்பை முகம்மது முஸ்தாபா
2. அகம்மது லெப்பை முகம்மது சரீபு இருவரும் தனியூற்று.

எதிராளிகள்

இதன்கீழ் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கில் எதிராளிகளுக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1971-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை காலை முறையே 10 மணிக்கும் 11 மணிக்கும் பிரசித்த வெந்தீசில் விற்கப்படுமென்று இத்தாலறிவிக்கப்படுகிறது. அதாவது:.

காணிகளிடத்தில்

ஆதனங்களின் விபரம்

1 வது காணி

வடமாகாணம் வவுனியா டிஸ்திறிக் கரைதுறைப்பற்று முள்ளியவளை பிரிவு தனியூற்றில் உள்ள ''நாங்கள் குடியிருந்த வளவு'' என்னும் காணி விலாசம் 37 1/2 யார் நீளம் 36 யார் அகலம்.

இதன் எல்லைகள்

கிழக்கு: ரேட்டு.
தெற்கு: சேகுக்கண்டு முத்ததம்பிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம்.
மேற்கு: வாய்க்கால்.
வடக்கு: இரண்டாங் காணி

இந் நான்கு எல்லைகட்குப்பட்ட ஆதனம் முழுவதும் அடப்பலாக தென்னைகளும், மாமரங்களும்.

2 வது காணி

வடமாகாணம் வவுனியா டிஸ்திறிக் கரைதுறைப்பற்று முள்ளியவளை பிரிவு தனியூற்றில் உள்ள ''நாங்கள் குடியிருந்த வளவு'' விசாலம் 75 யார் நீளம், 18 யார் அகலம்.

இதன் எல்லைகள்

கிழக்கு: ரேட்டு.
தெற்கு: 1 வது காணி.
மேற்கு: வாய்க்கால்.
வடக்கு: முத்து யாப்பா பெண் சித்து உம்மாவின் ஆதனம்.

இந் நான்கு எல்லைகளுக்குட்பட்ட ஆதனத்தில் சொரியலாய் அரைவாசி அடங்கலாக தென்னைகளும் பனைகளும்.

அறவிடும்தொகைகளின் விபரம்

கொமிசன் தொகை:-
ரூபா 1,000/-
வட்டி: 6-5-1967-ம் திகதிதொடக்கம் 28-4-1968 வரையும் ரூபா 500/க்கு 15 வீத வட்டி ......... வட்டி அதன்பின் முழுத்தொகைக்கும் கடன் அறவிடும் வரைக்கும் 5 வீத வட்டி.
கோட்டுச் செலவு: ரூபா 288/-
பிஸ்கால் கட்டணமும் பவுண்டேஜ்ஜும் அறவிடப்படும்.

ஆ. குணநாயகம்;
மேலதிக பிரதி பிஸ்கால்,
வவுனியா;
2790

## அழிக்கப்பட்டது

கோட்டை, ஞாயிறு
இ போ ச பஸ்களில் நீல நிற வட்டத்தின்மீது சிவப்பு நிறத்தினல் பொறிக்கப்பட்டிருந்த சிங்கங்கள் அழிக்கப்பட்டு நீல வட்டத்தினுள் மஞ்சள் சதுரம் மாத்திரமே தற்போது இடப்பட்டிருக்கிறது.


கலைக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட கலையுலக மேதை
எஸ். எஸ். வாசனின் கடைசிப் படைப்பு !
**யாழ். வின்ஸர் வெண்திரையில்**
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும் சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்
ஜெமினியின்
**விளையாட்டுப் பிள்ளை**
(ஈஸ்மன் கலர்)
மற்றும் நடிகர்கள்
காஞ்சனா, பாலையா, மனேரமா, சோ, ரோஜாரமணி.
குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய படம்.

### லாவோஸில் தென்வியட்னும் படைகள் சங்கடம்

# மீட்பு வேலைகளில் ஈடுபட யு.எஸ். படைகளும் தயக்கம்

## வடக்கின் எதிர் தாக்குதல் உக்கிரமடைந்துள்ளது

வியன்டியான், பெப். 21 லாவோஸில் வட வியட்னும் படைகளின் மூர்க்கத்தனமான எதிர்த் தாக்குதலின் காரணமாக அமெரிக்க ஹெலிகொப்டர்கள் யுத்த தளபாடங்களைத் தென் வியட்னும் நிலைகளுக்கு ஏற்றிச் செல்ல மறுத்துவிட்டன.

வட வியட்னும் படைகளால் சூழப்பட்டுள்ள தென் வியட்னும் படைகளை மீட்பதற்கு அமெரிக்க ஹெலிகொப்டர் படைகளால் முடியவில்லை.

லாவோசில் போர் புரியும் கம்யூனிஸ்ட் படைகளுக்கு வட வியட்னுமியர் அனிக்கும் சப்ளைகளைத் தடை செய்ய அமெரிக்கப் படைகளின் உதவியுடன் தென் வியட்னுமியர் கடுமையாக முயன்று கொண்டிருக்கின்றனர். ஆனால் வட வியட்னுமியரின் கடும் தாக்குதல் காரணமாக முன்னேறிச் செல்லமுடியாத நிலையில் தென் வியட்னும் படைகள் இருக்கின்றன. வட வியட்னுமியரின் விமான எதிர்ப்புப் பீரங்கித் தாக்குதல் கடுமையாக இருப்பதினுல் அமெரிக்க ஹெலிகொப்டர்கள் யுத்த தளபாடங்களை ஏற்றிச் செல்ல மறுத்துவிட்டனவாம். இந்தப் போரில் மேலும் 6 அமெரிக்க ஹெலிகொப்டர்கள் வடவியட்னுமியரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பீரங்கித் தாக்குதல் கடுமையாக இருந்தபோதிலும் கூட, 160 தென் வியட்னும் துருப்புகளை அமெரிக்க ஹெலிகொப்டர்கள் யுத்த நிலைகளுக்குக் கொண்டு சேர்த்தன.

கடந்த 48மணி நேரமாக யுத்த முனையில் கடும் போர் நடைபெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே நேரத்தில் வட லாவோஸ் பகுதியில் வட வியட்னும் படைகள் முன்னேறி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பிரிட்டன், சோவியத்துக்கு

## பதட் லாவோக்கள் அவசர வேண்டுகோள்

கம்யூனிஸ்ட் சார்பு பதட் லாவோக்கள் சோவியத் யூனியனுக்கும் பிரிட்டனுக்கும் அவசரச் செய்தி ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர். லாவோசில் நடைபெறும் போரில் தென்வியட்னுமியருக்கு உதவியாக தாய்லாந்து படைகளை அனுப்பி வைத்துள்ளதாக இவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். இதை பதட்லாவோ செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

இவ்விரண்டும் 1962-ம் ஆண்டு ஜெனிவா மகாநாட்டின் கூட்டுத் தலைமை நாடுகளாகும். பதட்லாவோவின் அரசியல் பிரிவான லாவோஸ் தேசப்பிரியர் முன்னணியின் மத்திய கமிட்டி பொதுச்செயலாளர் திரு. போமி பொங்விச்சிற் இச்செய்தியை எப்பொழுது அனுப்பினுர் என்பதை அச்செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கவில்லை.

இம்மாதம் 16-ம் திகதி தாய்லாந்து இரு ராணுவப் பிரிவை சாம் தொவ்-லொவ்ஷெங் பகுதிக்கு அனுப்பி வைத்ததாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது, முன்பே இருக்கும் தாய்லாந்துப் பெரும்பகுதி படைகளுடன் இவர்களும் சேர்ந்து கொண்டனர் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து அரசாங்கம் லாவோசுக்குள் தாய்லாந்துப் படைகளை அனுப்புகிறதென்ற செய்தியை மறுத்துள்ளது.

## மக்கள் தினசரி மீண்டும் தாக்குகிறது

ஹொங்கொங், பெப். 21 லாவோசுக்குள் தென்வியட்னுமியர் படையெடுத்திருப்பது செஞ்சீனுவுக்கு ஒரு பயமுறுத்தலாகும் பீக்கிங் மக்கள் தினசரி மீண்டும் கருத்து வெளியிட்டிருக்கின்றது.

இந்தோசீனுவில் சண்டை விஸ்தரிக்கப்பட்டிருப்பது சீனுவைப் பயமுறுத்துவதாகாது என்று அதிபர் நிக்ஸன் தெரிவித்திருந்ததற்கு மக்கள் தினசரி பதிலளித்திருக்கின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தோசீனமக்கள் நடத்திவரும் போராட்டத்துக்கு சீன மக்கள் ஆதரவளிக்காமலிருக்கும் வகையில் அவர்கள் கை கால்களை நிக்ஸன் கட்டிப் போடுவதற்குஎடுக்கும்முயற்சிநிச்சயம் வெற்றியளிக்காது என்று மக்கள் தினசரி எழுதியிருக்கின்றது.

வடமேற்கு ஐரோப்பாவிலோ அல்லது தென் அமெரிக்காவிலோலாவோஸ் இருக்கவில்லை இந்தோ சீனுவின் வடக்கே தான் அது இருக்கின்றது. சீனுவுடன் அதற்கு நெருங்கிய தொடர்பு உண்டு. சீனுவுடன் பல நூற்றுக்கணக்கான மீட்டர்கள் நீளமான எல்லையும் அதற்கு உண்டு இதை நிக்ஸன் மறக்கலாகாது. என்று மக்கள் தினசரி எழுதியிருக்கிறது.

······

### பத்திரிகையாளருக்கு

## 5 வருடச் சிறை

ராவல்பிண்டி, பெப். 21 பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் இருந்த பொழுது, ஆணைமீறி செய்திகள் பிரசுரித்ததாக இரு பாகிஸ்தான் பத்திரிகையாளர்களுக்கு பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் 5 வருடம் சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது.

······

## மந்திரிக்கு விண்ணப்பம்

நாவலப்பிட்டி, ஞாயிறு 1969ல் பொன்விழாக் கொண்டாடிய நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம் தற்போது செயற்படாது இருக்கிறது.

நிர்வாக சபையைக் கலைத்து, பொதுக்கூட்டத்தைக் கூட்டும்படி சில இந்து வாலிப சங்க உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தனர். இவ்வேண்டுகோள் பலன் எதையும் கொடுக்காது போகவே கலாச்சார மந்திரி மூலம் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளனர்.

······

## வீடு தீக்கிரை

அம்பன், ஞாயிறு அம்பனைச் சேர்ந்த கதிரன் வைரவனின் வீடு நேற்றிரவு தீக்கிரையானது இவ்விபத்தில் பெருந்தொகையான பொருட்கள் சேதமடைந்தது இத் தீவிபத்துப்பற்றிக் கூறப்படுவதாவது: கதிரன் வைரவன் என்ற வயோதிபரும் மனையாளும்வீட்டினுள் நித்திரையாக விருந்த சமயத்தில் கூரை தீப்பற்றி எரிந்ததாகவும் இவர்கள் துடி துடித்தெழுந்து சத்தமிடவே அயலவர் வந்து நெருப்பை தணித்ததாகவும் கூறப்படுகின்றது வயோதிபர்கள் இருவரும் எந்தவித அபாயமுமின்றித் தப்பிக் கொண்டனர். திட்டமிட்டே வீட்டிற்கு தீவைத்திருக்கலாமெனக் கருதப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

### ஷெரன்டேட் கொலை வழக்கு:

## காதல் தோல்வியால் ‘ஹூக்கா’ புகைத்தாராம்

### இன்னொரு பெண் சாட்சியம்

லொஸ் ஒஞ்சலஸ், பெப். 21 15 வயதாய் இருக்கும் போது பள்ளியில் படிக்கையில் ஏற்பட்ட காதல் தோல்வியின் காரணமாக தாம் ‘ஹூக்கா’ புகைக்க ஆரம்பித்ததாக நடிகை ஷெரன் டேட்டின் கொலைசம்பந்தமான ஜூரர்விசாரணையிக் சாட்சியமளித்த 21வயதான அழகி வெஸ்லிவான் ஹவுட்டன் கூறினுர்.

ஷெரன்டேட் கொலைவழக்கில் மேன்சனுடன் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மூன்று பெண்களில் இவர்தான் மிகவும் வயதில் குறைந்தவர். காதல் தோல்வி காரணமாக முதலில் போதைத்தரும் வஸ்துக்களை பாவித்ததாகவும் பின்னர் சார்ள்ஸ் மேன்சனின் ஹிப்பிக்குடும்பத்தில் சேர்ந்ததாகவும் அவர் சொன்னுர்.

இந்த நான்கு குற்றவாளிகளையும் விஷவாயு அறையில் போட்டு மரணதண்டனைக்குள்ளாக்குவதா அல்லது ஆயுள்தண்டனை விதிப்பதா என்பது பற்றி முடிவெடுப்பதற்கான விசாரணை இப்பொழுது ஜூரர்சபையால் நடத்தப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே சாட்சியமளித்துள்ள சூஸன் அட்கின் (22) பெட்றிஷியா கிரென்விங்கின் (23) ஆகிய இருவரும் கொலைக்குற்றத்தை ஒப்புக்கொண்டபோதிலும் இதில் தங்கள் தலைவன் சார்ல்ஸ் மேன்சனுக்கு எதுவித தொடர்புமே இடையாது என்று சாதித்துவந்திருக்கிருர்கள்.

கொலைக்குற்றச் சாட்டு ஒன்றின் மீது தங்கள்ஹிப்பிக் குடும்பத்தைச்சேர்ந்த பொபிபீயு சோலீல் என்பவர் கைதுசெய்யப்பட்டதினுல் இதுவிஷயத்தில் பொலிசாரைத்தடுமாறச் செய்வதற்காக மற்றக் கொலைகளைச் செய்ய உத்தேசிக்கப்பட்டதாக முந்திய இரு பெண்களும் கூறினுர்கள்.

செல்வி வேன்ஹவுட்டன் தமது சாட்சியத்தில் பீயு சோலீல்தான் தம்மை இந்தக் குடும்பத்துக்குள் கொண்டுவந்ததாகவும் பின்னர் அவருடன் தாம் காதல்வசமானதாகவும் சொன்னுர்.

மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்த அவர் காலூரியில் சிறப்பான இடம்வகித்து வந்தாராம், கல்லூரி காலப்பந்தாட்ட கோஷ்டியின் ‘ராணி’யாகத்தாம் தெரிவு செய்யப்பட்டதாகவும் சொன்னுர்.

“அதன்பின்னர் முதல் தடவையாக காதல் வசப்பட்டேன். அவரோடு இன்னமும் தான் எனக்கு காதல் உண்டு ஆனுல் என்னோடு எதுவித தொடர்பும் அவர் வைத்துக்கொள்ளமாட்டார் என்ருர் செல்வி ஹவுட்டன்.

கலிபோர்ணியாவில் பீயு சோலீல் மற்ற இரு பெண்களோடு சுற்றித்திரிந்து கொண்டிருந்த போது அவர்களோடு நானும் சேர்ந்தேன் அவர்களோடு இருப்பது மிகவும் இன்பமாக விருந்தது என்ருர்

இசைவாணர் ஹாறி ஹின்மன் என்பவரைக்கொலை செய்ததாக பீயுசோலீல் கடந்த ஆண்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார். இதில் மேன்சன் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

## மே.வங்காள சம்பவங்கள்: இந்திரா கவலை

கல்கத்தா, பெப் 21 மேற்கு வங்காளத்தில் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கேற்ற கடுமையான பந்தோபஸ்து நடவடிக்கைகளை எடுப்பதென ராஜ்ய அரசாங்கம் முடிவுசெய்தது.

கல்கத்தாவிலுள்ள ராஜ்பவனில் நடைபெற்ற கூட்டத்திற்கு மேற்கு வங்காள கவர்னர் தலைமை வகித்தார். கல்கத்தா நகரசபை உறுப்பினர் தாக்கப்பட்டது- சம்பந்தமாகவும் இங்கு ஆராயப்பட்டது. வங்காளத்தில் அதிகரித்து வரும் வன்முறைகளைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது. நேற்று கவுராவில் நடைபெற்ற வெடிவிபத்தொன்றில் வேட்பாளர் ஒருவர் தெய்வாதீனமாகத் தப்பினுர். 6 பேர் காயமடைந்தனர்.

### பிரதமர் அதிர்ச்சி

வங்காளத்தில் இந்திய போர்வார்ட் புளக் கட்சித் தலைவர் திரு. ஹேமந்த குமார் பாசு குத்திக்கொலை செய்யப்பட்ட செய்தி கேட்டதும் பிரதமர் இந்திரா காந்தி அதிர்ச்சி அடைந்தார் இக்கொலை சம்பந்தமாக பிரதமர் இந்திரா காந்தி மத்தியப் பிரதேசத்திலுள்ள ஜெயப்பூரிலிருந்துஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கொலைசெய்யப்பட்ட ஹேமந்த குமார் பாசு தேசபக்தி உடையவர். நாட்டுமக்களின் மரியாதைக்குரியவர். அவரைக் கொலைசெய்த செயல் மிகவும் கண்டிக்கக்கூடியது, மக்களிடம் நம்பிக்கை இல்லாதவர்களும் குழப்பவாதிகளும் நாட்டில் வன்முறைச் செயல்களைச் செய்துவருகின்றனர். இவர்களுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்து செயல்படவேண்டும். அதன் மூலம்தான் நாட்டில் வன்முறைகளை ஒழித்து

(7ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

உண்மையான சேதச பக்தி என்பது, எதற்கும் அயல் நாடுகளை நம்பியிருக்கக்கூடாது. தனி மனிதர்களைப் போலவே நாடுகளும் தமிகளுக்குத் தாங்களே உதவிசெய்துகொள்ளவேண்டும். அப்படி ஒரு நாடு செய்துகொள்ளவில்லையென்றால், அந்நாடு இன்னும் முன்னேற்றமடையவில்லை என்று பொருள். —விவேகானந்தர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Teiegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 10ந் திகதி (22-2-71)

## தேர்தலும் வன்செயல்களும்

இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது. இந்தியாவில் இடைத் தேர்தல் நடைபெற லோகசபைக்கும் மற்றும் மூன்று ராஜ்ய சட்ட சபைகளுக்கும் நடக்கும் தேர்தல் பிரசாரம் ஏறவர சூடேறி இன்னி உண்டுவிட்டதுபோல் வன்முறைகள் அதிகரித்துள்ளன உலகிலே மிகப் பெரிய ஜனநாயகநாடென்று புகழ்பெற்ற இந்தியாவில், இதுவரை மிக அமைதியாகத் தேர்தல் நடப்பது வழக்கம், ஆனால் இப்பொழுதோ திருஷ்டி விழுந்ததுபோல். மேற்கு வங்காளத்தில் மட்டுமல்ல இந்தியா எங்குமே பலாத்கார சம்பவங்கள் அதிகரித்துள்ளன

மேற்கு வங்காளத்திலே தேர்தல் வேட்பாளர்கள் உள்ளிட்டுப் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர். வாக்குகளைக் கேட்கத் தெருக்களிலும் சந்துகளிலும் வீடு வீடாக வரும்போது வேட்பாளர்களைக் கொன்றுவிடுவோம் என்று நக்ஸலைபாரிகள் பயமுறுத்தியுள்ளனராம், இராணுவப்பட்டாளங்கள் விசேஷ காவலுக்காகப் போட்டும் அங்கு ஒரு நாளைக்குச் சுமார் 10 பேருக்குக் குறையாமல் பலியாகிவருவதாகத் தெரிகிறது. தமிழ் நாட்டிலும்கூடப் பல தொகுதிகளில் ஒரு நாளைக்கு ஆறு அல்லது ஏழு பலாத்காரச் சம்பவங்கள் நடைபெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன கத்திக்குத்துகளுக்கும் கல்லெறிகளுக்கும் கணக்கில்லை. அமைதியாக இருந்த கிராமங்கள் அல்லோல கல்லோலப்பட்டுப் பொதுமக்கள் எச்சமயத்தில என்ன நடக்குமோ என்று பயந்து வாழுவதாகத் தெரிகிறது. வகுப்புவாதங்களும், கட்சிப் போட்டிகளும், இலஞ்சலாவண்ணியங்களும் அதிகரித்துள்ளனவாம் இந்நிலை இப்படியே நீடித்து இதே சூழ்நிலையில் தேர்தல் நடப்பதாயின், அதை உண்மை ஜனநாயக முறை என்று எப்படி கூறமுடியும்

நாட்டில் அமைதியான சூழ்நிலையில் தேர்தல் நடந்தால்தான், மக்கள் பயமின்றி தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யக்கூடியதாக இருக்கும். மேற்கு வங்காளத்தில் ஜனநாயகத் தேர்தல் முறையிலேயே நம்பிக்கையின்றி வன்செயலில் ஒரு சாரார் ஈடுபட்டிருக்கையில் மக்கள் நிம்மதியாக எப்படி வாக்களிப்பார்கள்? அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒரு தொண்டர்படையை வைத்திருப்பதால், அப்பேர்ப்பட்ட படையினருக்குள் மோதல்கள் ஏற்படுகின்றன பிரதமர் இந்திரா உள்ளிட்டுப் பல அபேட்சகர்களுக்கும் பிரசாரகர்களுக்கும் ஆபத்துகள் கொஞ்சமல்ல. தேர்தல் தினத்திற்கு முன் எவ்வளவு பேர் பலியாகின்றனரோ, வென்றபின்னரும், அவர்கள் நிம்மதியாக வாழமுடியுமா? என்பது சந்தேகம்.

அங்குள்ளதுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் நிலைமை மேலாகுமென்றாலும், இங்கும் பலாத்கார இயக்கங்கள் தலைதூக்குவதால் நாம் கவலையின்றியிருக்க முடியாது. தேர்தல்நடைமுறை விஷயமாக, இங்கு எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஊர்வலங்கள், கொடிகள், சுவரொட்டிகள் முதலியவிஷயமாகப் பல தடைகள் போட்டுள்ளதாலும், வாக்களிப்பு நிலையத்திற்கு வாகனங்களில் செல்லப்படாதென்று உத்தரவிட்டுள்ளதாலும் இலங்கையில் தேர்தல்கள் அதிக அமைதியாக நடைபெறமுடிகிறது. இலங்கையைவிட இந்தியா பன்மடங்கு பெரிதாகையால், தேர்தல்காலப் பிரச்னைகள் அதிகமாகும், என்றாலும் மேற்கூறிய விஷயங்களில் பல கட்சிகளுக் சேர்ந்து முன்கூட்டியே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு அவற்றைச் சட்டமூலம் செயலுக்குக் கொண்டுவந்தால் எதிர்காலத்தில் தேர்தல் அதிக அமைதியாக நடக்க முடியும்,

ஆனால் இப்போது வன்செயல்களையும் ஊழல்களையும் தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமைமட்டுமல்ல, பொதுமக்களின் சிறப்பாக வாலிபர்களின் பொறுப்புமாகும். வாலிபர்கள் துணிச்சலுடன் முன்வந்து பல இடங்களில் வன்முறைச் செயல்களைத்தடுத்து அமைதி ஏற்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. வேலையில்லாக் கஷ்டம் முதலியவற்றையும் பொருளாதார நீதியையும் பார்லிமெண்ட் வழியால் தீர்க்கமுடியாதென்றும், பலாத்காரப் புரட்சி வழியிலேயே இவற்றைத் தீர்க்க முடியுமென்றும் ஒரு சாரார் நம்புகின்றனர் பிரச்னைகள் தீர்க்கப்படாமல், வர வர வளர்ந்து வருவதால் மேற்குறித்த கருத்துக்கள், அதுவும் வேலையற்ற படித்த வாலிபர்களிடம் அதிகரித்துவருகின்றது வன்முறைச் செயல் அதிகரிக்குமாயின் ஜனநாயகம் செத்துவிடக் கூடும். ஆகவே ஜனநாயகம் உயிருடன் இருந்து தழைத்தோங்க வேண்டுமாயின், மக்களின் அன்றாடப் பிரச்னைகளையும் கஷ்டங்களையுந்தீர்க்க, ஆளுங் கட்சி மட்டுமன்றி எல்லாக் கட்சிகளும், ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் துரதிஷ்டவசமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலேயும், தொடர்ந்து அதை வைத்திருப்பதிலும் தான் போட்டிக்கட்சிகள் ஆவல்கொண்டுள்ளனவேயன்றி, மக்களின் கஷ்டங்களைக் குறைக்கவேண்டுமென்பதில் அல்ல இவ்வித சுயநல மனப்பான்மை மாறி ஒத்துழைப்பு ஏற்பட்டால் தான் ஜனநாயக முறை நீடித்திருக்க முடியும்

யாழ்ப்பாணம், திங்கள் வடமாநில வித்தியாதிபதி திரு. டபிள்யூ. டீ. சீ. மகாதந்தில இம்மாதம் 25ம் திகதி சாவகச்சேரி தொகுதியிலுள்ள பல பாடசாலைகளை நேரில் சென்று பார்வையிடவிருக்கிறார் (குவிம)

# 'உலகப்பிரதம சாரண[ர்]'
# பேடன் பவல்

— உ. ந. தேவகடாட்சம் —

( யாழ். மாவட்ட உதவி சாரண ஆணையாளர் )

## 'நீ வாழ்ந்த உலகத்தை முன்னிலும் ஒரு படி முன்னேறச் செய்து விட்டுச் செல்ல அல்லும் பகலும் அயராது உழை'

சாரண இயக்கத்தின் தந்தையும், தாபகரும், உலகப் பிரதம சாரணரும் சேர். ரொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் பிரபு ஆவர். ஒவ்வோர் வருடமும் அகில உலகமெங்கும் பெப்ரவரி மாதம் 22-ந் திகதியைச் சாரணர் தாபகர் தினமெனவும், வழிகாட்டிகள் நினைவு கூருந் தினமெனவும் விழா வெடுத்து வருவதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். பேடன்பவல் பிரபுவும் சீமாட்டி பேடன்பவலும் இத்திகதியில் இருவரும் பிறந்ததே காரணமாகும்.

உலகம் முழுவதும் உள்ள சிறுவர்களுக்குள் என்றும் அழியாத செல்வாக்கைப் பெற்றவர் பேடன் பவல் பிரபு ஆவர். இவர்போல் எவரும் சிறுவர்களுக்குள் இவ்வளவு செல்வாக்கைப் பெற்றதாகச் சரித்திரத்திலேயே இல்லை என்று ஒருமுறை சேர். வின்ஸ்ரன் சேர்ச்சில் கூறியுள்ளார். இவர் ஆக்கியது ஓர் இயக்கமே அன்றிச் சங்கமல்ல. இன்றைய சாரணன் நாளைய சிறந்த பிரசையாவான். சீரான ஒழுக்க வாழ்வுக்கு இவ்வியக்கம் ஒரு சிறந்த வழிகாட்டி. தொண்ணூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் ஒரு கோடிக்கு மேற்பட்ட சாரணர் இருக்கிறார்கள் என்றால் இவ்வியக்கம் எவ்வளவு நாலாதிசைகளிலும் பரவியிருக்கிறது எனக் கூறலாம். எனவே இவ்வியக்கத்தின் தந்தை பற்றி நாம் நன்கறியவேண்டியது மிக அவசியமாகும்.

### இங்கிலாந்தைச் சேர்ந்தவர்

பேடன்பவல்பிரபு இங்கிலாந்து தேசத்தில் லண்டன் மாநகரில் 1857-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ந் திகதி பிறந்தார். பேடன் என்பதும், பவல் என்பதும் இருவேறு குடும்பப் பெயர்கள். இவரது தந்தை வண. எச். ஜி. பேடன்பவல் ஆவர். இவர் ஒக்ஸ்போட் சர்வகலாசாலைப் பேராசிரியராயிருந்தார். பிரித்தானிய கடற்தளபதி அட்மிறல் சிமித் அவர்களின் புத்திரியே பேடன்பவல் பிரபுவின் தாயாராவர்.

### இரு கரங்களால் ஒரே நேரத்தில் சித்திரம் வரைவார்

சிறு வயது முதல் இயற்கையில் விருப்பு, புத்திக்கூர்மை, துணிவு, மிருகங்கள், பறவைகள் போன்று தொனி வைத்தல், நடிப்பு, சித்திரம், சங்கீதம் இவற்றில் சிறந்து விளங்கினார். இரு கரங்களாலும் ஒரே நேரத்தில் சித்திரம் வரையும் திறமையும் இருந்தது. 1869-ம் ஆண்டு லண்டன் சாட்டர் கவுஸ் கல்லூரியில் உபகாரச்சம்பளத்தில் படிக்கச் சேர்த்துக்கொள்ளப்பட்டார் 19 வயதில் கல்லூரிப்பட்டத்தைப் பெற்றார், 1876ல் இராணுவத்தில் சேர்ந்து இந்தியாவிலே பம்பாயில் கடமையாற்றினார். குதிரைப்படையின் உபதளபதியானார் சிறு ஈட்டிக்கொண்டு காட்டுப்பன்றி வேட்டையில் இந்திய மக்களால் பாராட்டுப் பெற்று 1883-ம் ஆண்டு கடிற் கிண்ணத்தை முதல் பரிசாகப் பெற்றார்.

### மேஜர் ஜெனரல் பதவி

சுதேசிகள் இவரது ஆண்மை, சாரணியத் திறமை, சுவடு தொடரும் தன்மை இவற்றைக் கண்டு 'ஒருபோதும் துயில் கொள்ளாத ஓநாய்' என்று பொருள்படும். 'இம்பீசர்' என அழைத்தனர். 1899-ம் ஆண்டு அக்டோபர் 12-ந் திகதி தொடக்கம் 1900-ம் ஆண்டு மே மாதம் 17-ந் திகதி வரை 215 நாட்கள் மேவ்கிங் நகரம் எதிரிகளால் முற்றுகையிடப்பட்டிருந்தது தென்னாபிரிக்காவில் பிரித்தானியர் மேவ்கிங்கில் செய்த யுத்தமே போவர் யுத்தமாகும். இதில் வெற்றி பெற்று மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டார்

### பிறவுண்ஸி தீவில் ஆரம்பமான இயக்கம்

இவற்றில் கண்டறிந்த அனுபவத்தைக் கொண்டு சிறுவர்களுக்குள் ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க எண்ணி 1907-ம் ஆண்டு ஆங்கிலேயக் கால்வாயருகே பிறவுன்ஸி தீவில் ஜுலை 29-ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 9-ம் திகதிவரை 20 சாரணச் சிறுவர்கள் 4 அணிகளாகப் பாசறைவாசம் முதன் முதலாகச் செய்து மிக மகிழ்ச்சியடைந்தனர் 1908-ம் ஆண்டு இவ்வியக்கத்தின் தொண்டனாக வரதிடங்கொண்டார். ஏப்ரல் மாதம் 18-ம் திகதி சிறுவர் சாரணீயம் என்னும் நூல் வெளியிட்டார்.

1909-ம் ஆண்டு கிறிஸ்ரல் மாளிகையில் சாரணர்விழா நடைபெற்றது. அதே ஆண்டில் கடற் சாரணர் படை ஆரம்பிக்கப்பட்டது.

### பெண்கள் சாரணீயம்

1910-ம் ஆண்டு இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். இவரது தங்கை குமாரி அக்னெஸ் பேடன் பவல் உதவியுடன் 1910-ம் ஆண்டிலேயே வழிகாட்டிகள் இயக்கத்தை (பெண்கள்சாரணீயம்) ஆரம்பித்தார். 'தயாராயிரு' என்பதே இதன் குறிக்கோளாகும். 1912ல் சாரணப் படைகளைச் சந்திக்க உலகப் பிரயாணம் செய்தார். அகில உலகமும்சாரணஇயக்கத்தை உலகச் சகோதரத்துவ இயக்கமென விளக்கம் கொடுத்தார். 1912ல் கரீபியன்கடலில் கப்பலில் பிரயாணம் செய்தபோது 23 வயது நிரம்பிய அழகிய ஒலேவ் சென்ற் கிளேயர் சோம்ஸ் என்னும் பெண்மணியைச் சந்தித்தார். அப்போது பேடன்பவலுக்கு 55 வயதாகும் அதே ஆண்டில் இவர்களுக்குத் திருமணம் நடைபெற்றது.

### இலங்கையில் சாரண இயக்கம்

1912-ம் ஆண்டி[...]
இலங்கையிலும் ச[...]
இயக்கம் ஆரம்ப[...]
மாத்தளை கிறிஸ்தவ [...]
கல்லூரியில் திரு எ[...]
வின்சன் என்னும் ப[...]
வேலைப்பகுதி பொற[...]
நர் ஆரம்பித்து வை[...]
1916ல் ஓநாய் கு[...]
இயக்கம் 8—11 [...]
மாணவருக்குஆரம்ப[...]
இவ்வியக்கத்தில் [...]
கோள் "இயன் ற[...]
திறமையாய்ச் செய்," [...]
பதே. இவ்வியக்கமே [...]
ணியத்தின் அத்திவ[...]
கும் இதேயாண்டில் [...]
பாணத்தில் காலியில் [...]
றிச்மெண்ட் கல் [...]
லிருந்து திரு வின்[...]
மென்டீஸ் என்பவர் [...]
சாரணருடன் வந்து [...]
இயக்கத்தை ஆரம்[...]
வைத்தார்.

### பல்வேறு சாரண இயக்கங்க[ள்]

1918ல் திரிசாரணர் [...]

பேடன்பவல் பிரபு அவர்[...]

## "சந்தோஷ[...]

"பெரும் பணம் பல[...]
வனாக இருப்பதால் ஒ[...]
பூரண சந்தோஷ[...]
பெறமுடியாது. வாழ்[...]
துறையில் வெற்றி[...]
தாலும் அம்மகிழ்ச்சி[...]
டாது. தன் கடுமை[...]
அது வந்தெய்தாது. ச[...]
ஷத்தின் ஒரு ப[...]
அடையவேண்டுமானா[...]
வனாக இருக்கும்[...]
ஆரோக்கியமும் தி[...]
திரமும் உள்ளவனாக [...]
கொள். அப்போது [...]
யோகமுள்ளவனாக வி[...]
வாய் - பெரிய மனி[...]
வரும்பொழுது வா[...]
யின் இன்பத்தை அனு[...]
பாய்.

"போதுமென்ற [...]
பொன்செய்யும் ம[...]

## தமிழ்[...]
## தொடர்[...]
### தரமானவ[...]

கொழும்பு,[...]
திரைப்படக் கூட்டு[...]
னம் அமைக்கப்பட்ட[...]
வருங்கட இந்தியா[...]
ந்து தமிழ்ப் ப[...]
தாராளமாக தரு[...]
படும் என்று தகவல் [...]
பரப்பு அமைச்சு வட்[...]
களிலிருந்து தெரி[...]
கிறது. இலங்கையில் [...]
பட உற்பத்திக்கு சக[...]
மான ஊக்கமும் அ[...]
படுமென்றும் அவ் வ[...]
ரங்கள் தெரிவித்தன, [...]
கைத் தமிழர்களின் [...]

### பிரயாணிகள்[...] சங்கம் நன்[றி]

யாழ்ப்பாணம், இ[...]
சிலாபம்- யாழ்ப்பா[...]
பஸ்சேவை விரைவில் [...]
பெறுவதற்கு உதவி [...]
சிலாபம் எம் பி இ[...]
அதிகாரி யாழ் ம[...]
முதல்வர் உடப்பு [...]
சபை தலைவர் யாழ் எ[...]
யாழ் மாநகர உறுப்[...]
கள் மற்றும் அனைவரு[...]
சிலாபம்-யாழ்ப்பாண[...]
பிரயாணிகள் சங்க[...]
செயற்குழு நன்றி தெ[...]
துள்ளது. சங்கத்தின் [...]
தரிசி திரு சி சி இரா[...]
வரன் இந்த தகவலைத் [...]
வித்தார்.

## இன்றைய பலன்

மாசி மாதம் 10-ந் திகதி (22-2-71)

**மேஷம்:** சூழ்ச்சிவலை பின்னும். அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். மன அடக்கம் வேண்டும்

**ரிஷபம்:** விலைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு. தாய்வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும்.

**மிதுனம்:** இனபந்துக்களுடன் உறவுமுறை பலப்படும். புண்ணிய காரியங்களில் அதிக விருப்பம் ஏற்படும்.

**கடகம்:** தூரத்துப் பயணம் துயரத்தை தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச் செலவுகளுக்கு இடமுண்டு,

**சிம்மம்:** தாம்பத்தியவாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திர வழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு.

**கன்னி:** கடன் தொல்லைகள் கவலையைத் தரும். உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும். நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம்,

**துலாம்:** பெருமையுடன் தலை நிமிர்ந்து வாழுவீர்கள் பிதாவழித்தனமும் சேரும். தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும்.

**விருச்சிகம்:** கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும்.

**தனுசு:** எண்ணத்தின் தாக்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணுக்கும். அற்பவிடயத்திற்குகூடப் பொல்லாங்கு கேட்க நேரிடும்.

**மகரம்:** பழைய நினைவுகள் உங்களைக் கவலையில் ஆழ்த்தும். நம்பிக்கையின் மூலம் பொருள் விரயத்திற்கும் இடமேற்படும்.

**கும்பம்:** இன்னலின்பின்னலால் இதயபாரம் ஏற்படும். சிறு விடயங்களுக்கு கூட குறைகேட்க நேரிடலாம்.

**மீனம்;** கலைஞர்கள் போற்றப்படுவார்கள். வெளியூர்களில் இருந்து அழைப்புக் கிடைக்கலாம். பிதாவழித் தனவரவுக்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
இருமலை க. வேலும்பிள்ளை

# ணா'

ங்கையில்
ண இயக்கம்

12-ம் ஆண்டிலேயே
கையிலும் சாரண
கம் ஆரம்பமானது.
தளை கிறிஸ்தவ ஆலயக்
ரியில் திரு எப். ஜீரீ
ன் என்னும் பகிர
ப்பகுதி பொறிவல்லு
ஆரம்பித்து வைத்தார்.
ல் ஒநாய் குருளையர்
கப் 8—11 வயது
வருக்குஆரம்பமானது
இயக்கத்தில் குறி
"இயன்றவரை
மயாய்ச் செய்,' என்
இவ்வியக்கமே சார
த்தின் அத்திவாரமா
இதேயாண்டில் யாழ்ப்
த்தில் காவியில் உள்ள
மண்ட் கல்லூரியி
து திரு வின்சென்ற்
டீஸ் என்பவர் தமது
ருடன் வந்து சாரண
த்தை ஆரம்பித்து
தார்.

று
ண இயக்கங்கள்
ல் திரிசாரணர் படை

ஆரம்பிக்கப்பட்டது. இதன் குறிக்கோள் சேவையாகும். 1920ல் சர்வதேச சாரணர் மகாநாடு இலண்டனில் கூடியது. இதன் கடைசி நாள் 'உலகப்பிரதம சாரணர்' எனப் பேடன்பவல் பிரகடனஞ் செய்யப்பட்டார். 1921-ம் ஆண்டு பேடன் பவலும் பாரியாரும் இலங்கைக்கு முதல்விஜயஞ் செய்தனர்.

1925ல் வலது குறைந்த சாரணர்படை ஆரம்பிக்கப்பட்டது. 1928ல் நைற் பட்டம் வழங்கப்பட்டது. 1929ல் 5-ம் ஜோர்ஜ் மன்னரால் பிரபுப்பட்டம் வழங்கப்பட்டது. 1941ல் ஆகாயச் சாரணப்படை ஆரம்பிக்கப்பட்டது. 1941-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி பேடன்பவல் பிரபு அவர்கள் 84 வயதில் தென்னாபிரிக்காவில் கெனியாவில் பூதவுடலை நீத்தார். 1946ம் ஆண்டு சிரேஷ்ட சாரணர் இயக்கம் ஆரம்பமானது. 'எதற்கும் தயாராயிரு' என்னும் குறிக்கோளைக் கொண்டது சாரண இயக்கம். கில்வெல் பூங்கா சாரணியத்தின் வீடாகும். பேடன்பவலின் ஞாபகம் 8 மாடிக் கட்டட வீடு சாரணியத்தின் அகில உலக நிலையமாகும்.

## பாடசாலை ஆரம்ப தினத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

இவ்வருடம் நாடு பூராவுமுள்ள சகல அரசாங்க பாடசாலைகளும் ஆவணி விடுதலையின் பின்பு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி திரும்பவும் தொடங்குமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகஸ்ட் 15ம் திகதி மடுத்திருப்பதியில் உற்சவம் நிகழவுள்ளதால் பாடசாலை தொடங்கும் தினத்தில் மாற்றம் செய்து தருமாறு கத்தோலிக்க ஆலோசகக் குழுவினர் கல்வி அதிகாரிகளிடம் கேட்டிருந்தனர்.

கல்வி உயர் அதிகாரிகள் ஆகஸ்ட்மாதம் பாடசாலை தொடங்கும்தினத்தில் மாற்றம் செய்து தருவதாக அறிவித்திருப்பதாகத் தெரிகிறது

— —

## விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், திங்கள்

வவனிக்குளச் சிவாலயத்தில் இம்மாதம் 22-ந் திகதி மகாசிவராத்திரிவிழா நடைபெறவிருக்கின்றது. இதனையொட்டி மாங்குளத்துக்கும் துணுக்காய்க்குமிடையில் விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (கு. வி. ம.)

—

ஸ்தல ஸ்தாபன

## நகரசபை தொழிலாளர் சங்ககூட்டம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ் மாநகர சபையின் மின்சாரப்பகுதியில் வேலை செய்யும் ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டம் 20-ம் திகதி மாலை லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் யாழ் மாவட்டப்பிரதிநிதி திரு. எஸ். நடராசா தலைமையில் மேற்படி சங்க காரியாலயத்தில் நடைபெற்றது.

அன்று நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் திரு. எஸ். நடராசா பேசுகையில், இலங்கையில், இரண்டாவது பெரிய மாநகரசபையாக விளங்கும் யாழ். மாநகர சபையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை நகரசபை வழங்காததை கண்டித்தும், தொழிலாளர்கள் ஒன்றுபட்டால் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை மாநகர சபை முதல்வர் முன்வைத்து வென்றெடுக்கலாம் என்றும் எமது நகரத்துக்கு வெளிச்சமூட்டும் தொழிலாளர்கள் வாழ்க்கையில் இருளடைந்திருக்கிறார்களென்றும் அவ்விருளை மாநகரசபை முதல்வரும், மற்றைய அங்கத்தவர்களும் ஒன்று சேர்ந்து அகற்றவேண்டும் என்றும் தொழிலாளர்களின்சேவைக்கேற்ப ஊதியம் கொடுக்கப்படவேண்டும் என்றும் பேசினார்.

மற்றும் திரு. எஸ். செல்வராசா, திரு. எஸ். விஜயானந்தம் திரு. என். இராசா ஆகியோரும் இக்கூட்டத்தில் பேசினர்.

மேற்படி சங்கத்தின் நடப்புவருட உத்தியோகஸ்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் ஆர். செல்வநாயகம். காரியதரிசி ஜி. டேவிட். தனாதிகாரி எ. கிறிஸ்தோத்திரம். நிர்வாகசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள் எஸ். செல்லையா. வி. திருநாவுக்கரசு, ஜி. பத்மசுந்தரம், எஸ். செல்வராசா, ஜே. சந்தியோகு, எம். கதிர்காமநாதன். போஷகர் ஆர். இராமச்சந்திரன்.

அன்னை கஸ்தூரிபாய் நினைவு தினம்

# பெண்குலத்துக்கோர் ஒண் திலகம்

'தெய்வந் தொழா அள்
கொழுநற் தொழு தெழு
வாள்
பெய்யெனப் பெய்யும்
மழை.'

மகாத்மாகாந்தி தென்னாபிரிக்காவிலுள்ள டர்பன் நகரத்தில் பாரிஸ்டர் உத்தியோகம் பார்த்து வந்த சமயம் ஒருநாள் வீட்டிலே கணவனுக்கும் மனைவிக்கும் சிறு வாக்குவாதம் ஏற்பட்டது.

காந்தியடிகளுக்கு அப்பொழுதே சொந்தக்காரர், பிறத்தியார், தன்னாட்டவர், பிறநாட்டவர், கறுத்தவர், வெள்ளையர் என்ற பேதம் அற்றுப்போய்விட்டது. மனிதராகப் பிறந்த எவரையும் வீட்டுக்கு அழைத்து உபசரிப்பார். அவருடைய காரியாலயத்தில் வேலை பார்த்த சில குமாஸ்தாக்கள் அவர் வீட்டிலேயே குடியிருந்தனர் எல்லோரும் ஒரே குடும்பம் என்றாய்விட்டது சட்டிபானை கழுவுதல் முதற்கொண்டு வீட்டுவேலைகள் அனைத்தையும் இந்தப்பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களே செய்துமுடிக்கவேண்டுமென்ற நியதி

ஒருமுறை 'தீண்டப்படாதவர்' என்று சொலலப்படும் சாதியில் பிறந்த ஓர் இந்திய கிறிஸ்தவர், குடும்பத்தில் ஒருவராக வந்து சேர்ந்தார். அவர் இடத்துக்குப் புதியவராதலால் அவருடைய அறையைச் சுத்தமாக்குவது போன்ற கடமைகளை வீட்டிலுள்ள மற்றவர்களே முதலில் செய்துகொடுக்கநேரிட்டது. கஸ்தூரிபாய்க்கு மட்டும் 'தீண்டாமை' என்ற விகாரம் இன்னும் மனத்லைத விட்டு அகலவில்லை. கிறிஸ்தவரின் அறையில் வேலை செய்யப்போகும்போது முகத்தை ஒருவிதமாகச் சுழித்துக்கொண்டே போவார். இதைக் காந்தி கவனித்துவிட்டார். கஸ்தூரிபாய் முகம் கோணிக்கொண்டு வேலைசெய்வது அவருக்குப் பிடிக்கவில்லை. இதமாகச் சொல்லி மனைவியை வற்புறுத்தலாம் என்று பார்த்தார். முடியவில்லை கோபம் தான் வந்தது

'இந்தமாதிரிச் சேஷ்டைகளை நான் வீட்டில் அனுமதிக்கமாட்டேன்' என்று வெடித்தார்.

'உங்கள் வீட்டைநீங்களே வைத்துக் கொள்ளுங்கள், என்னை விட்டுவிடுங்கள்' என்று திருப்பி வந்தது மறுமொழி.

காந்தி தம்மையும் மறந்து மனைவியின் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே தள்ளிவிடப் போனார். கஸ்தூரியின் கன்னங்களில் நீர் தாரை தாரையாக வழிந்தது.

உங்களுக்கு வெட்கமே இடையாதா? இவ்வளவு தூரம் உங்களையே மறந்துவிட்டீர்களா? உங்களை விட்டால் நான் எங்கேதான் போவேன்? உங்களுக்கு மனைவியாக வந்தபடியால் இப்படியெல்லாம் அடியும் உதையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறீர்களா? ஆண்டவனறிய மரியாதையாக நடவுங்கள். கதவைமூடுங்கள் மற்றவர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்' என்றுகதறியழுதார் கஸ்தூரிபாய்.

இச்சம்பவம் பற்றி காந்தி எழுதுகிறார். நான்முகத்தை சுண்டி வைத்துக் கொண்டேன். ஆனால் மனதுக்குள் வெட்கம் என்னை அரித்தது. என்மனைவி என்னை விட்டுப் பிரிய முடியாதென்றால் நானும்தான் அவளை விட்டுப்பிரிய முடியாது. இப்படி எத்தனையோ சச்சரவுகள் எழுந்தன. முடிவில் எப்பொழுதும் சாந்தி நிலவும். இருவரும் ஒருவரை ஒருவர் ஆழமாக அறிந்து கொள்வோம் எல்லையற்றசகிப்புத் தன்மை வாய்ந்த என் மனையாள் எப்பொழுதும் என்னை வென்று விடுவாள். ஒரு முரட்டுக் கணவனாயிருப்பதையும் அவளுக்கு ஆசானாயிருக்க வேண்டுமென்ற எண்ணத்தையும் கைவிட்டு விட்டேன் நாங்கள் அனுபவத்தால் முதிர்ந்த நண்பர்களானோம் பதிலுக்கு ஒரு நன்றிவார்த்தைகூட எதிர்பார்க்காமல் நான் சுகயீனமாயிருந்த நாட்களில் எனக்கு அன்போடு சிகிச்சை செய்து வந்தாள் நான் எடுத்த எல்லா முக்கியமான முடிவுகளிலும் தன்னை அறவே மறைத்து விட்டு என்னைப் பின்தொடர்ந்தாள்.

0 0 0

இந்தியப் பெண்மைக்கு இலக்கணமாக விளங்கிய வாசுகி, நளாயினி, சாவித்திரி முதலிய மாதர்குல திலகங்களின் பரம்பரையில் வந்தவர் அன்னை. பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக அவருக்கு பணிவிடை செய்வதே தன் வாழ்க்கையின் லட்சியமென ஒழுகி வந்தார், மகாத்மாவின் சத்திய சோதனைகள் எல்லாவற்றிலும் அவரும் பங்குகொள்ள வேண்டி நேரிட்டது. விரதங்கள் சத்தியாக்கிரகங்கள் சிறைவாசங்கள் எல்லாவற்றையும சாந்த முகத்தோடு பொறுத்து வந்தார்,

தென்னாபிரிக்காவில் மகாத்மா நடத்திய டோல்ஸ்டோய் பண்ணையிலுள்ள பெண்களையும் ஒரு தடவை தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடுத்தினார், அவர்களை வெள்ளையர் கைதுசெய்து ஜெயிலில் தள்ளினார்கள், அன்னை கஸ்தூரிபாயும் இவர்களில் ஒருவர் சிறைச்சாலையில் கொடுக்கப்பட்ட உணவு அவருக்கு சிறுதும் ஏற்றுக்கொள்ளவில்லை. உணவு படுமோசமென்பது ஒருபுறமிருக்க, ஒவ்வொரு நாளும் ஏராளமான துணிகளை சலவை செய்வதே அவர்களுக்கு அளிக்கப்பட்ட கடுமையான வேலை. வெளியேயிருந்து யாராவது அப் பெண்களுக்கு நல்ல உணவு கொண்டு போய்க் கொடுக்க முடியாது. கஸ்தூரிபாய் விரதம் இருப்பவர். ஒரு குறிப்பிட்ட உணவையே உண்பவர் இது அவருக்கு மறுக்கப்பட்டது. ஜெயிலிலிருந்து விடுதலையானபோது அவர் எலும்பும் தோலுமாய் விட்டார்

மகாத்மாகாந்தி இந்தியாவுக்கும் மனித குலத்துக்கும் செய்த அரிய பெரிய சேவைகளில் கஸ்தூரிபாயின் பங்கும் அளவிட முடியாதது. மஞ்சள் குங்குமத்துடன் அவர் இவ்வுலக வாழ்க்கையை நீத்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை

—வழிப்போக்கன்

பவல் பிரபு அவர்கள் விடுத்த கடைசிச்செய்தி:

## "...ந்தோஷத்துக்குரிய வழி"

...பரும் பணம் படைத்த
இருப்பதால் ஒருவன்
சந்தோஷத்தைப்
முடியாது. வாழ்க்கைத்
யில் வெற்றிபெறுவ
ம் அம்மகிழ்ச்சி கிட்
தன் கடுமையாலும்
ந்தெய்தாது. சந்தோ
ன் ஒரு படியை
யவேண்டுமானால் சிறு
இருக்கும்போதே
சக்கியமு... கிடைாத்
ம் உள்ளவனாக ஆக்கிக்
அப்போது நீ உப
முள்ளவனாக விளங்கு
- பெரிய மனிதனாக
பொழுது வாழ்க்கை
ன்பத்தை அனுபவிப்
...ாதுமென்ற மனமே
செய்யும் மருந்து''

என்பதை மனதிற் கொண்டு உவனிடமுள்ளவற்றுடன் திருப்தி அடைவாயாக. அதனால் கிடைக்கும் பூரண பலனையும் பெறுவாயாக. நிலவும் இருட்டும் வாழ்க்கையில் உண்டு. வாழ்வின் ஒளி தரும் நாள்களைச் சிந்திப்பாயாக ஆனால் உண்மையான மனமகிழ்வைப் பெறவேண்டுமானால் மற்றவர்களையும் மகிழ்ச்சியடையச் செய்வாயாக. "எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் பராபரமே'' என்பதை மனதிற் கொள். நீ வாழ்ந்த உலகத்தை முன்னிலும் ஒரு படி முன்னேறச்செய்து விட்டுச் செல்ல அல்லும் பகலும் அயராது பாடுபடுவோமாக.''

# தமிழ் படங்கள் ...டர்ந்து இறக்குமதி

## ...மானவருக்கே முதலிடம்

கொழும்பு, ஞாயிறு
...ரப்படக் கூட்டுத்தாப
அமைக்கப்பட்ட பின்
கட இந்தியாவிலிரு
தமிழ்ப் படங்கள்
ளமாக தருவிக்கப்
என்று தகவல் ஒலி
அமைச்சு வட்டாரங்
ருந்து தெரிய வரு
இலங்கையில்தமிழ்ப்
டற்பத்திக்கு சகல வித
ஊக்கமும் அளிக்கப்
ன்றும் அவ் வட்டா
தெரிவித்தன. இலங்
தமிழர்களின் தேவை

களைப் பூர்த்திசெய்யுமளவுக்கு உள்ளூர் உற்பத்தி உயர்ந்த தரத்தை எட்டிய பின் புங்கூட கூட்டுத்தாபனம் இந்தியாவிலிருந்து தமிழ்ப் படங்களை இறக்குமதி செய்தே வருமாம் வருகை மாத்திரம் கருத்தில் கொள்ளாமல் சிறந்த தரமுள்ள படங்களையே கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்யும், (சி பி ஏ)

......

## "ஈழகேசரி" பொன்னைா ஞாபகார்த்தவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

சித்திரை மாதம் 10-ந் திகதி 'ஈழகேசரி' பொன்னையா இருபதாவது வருட ஞாபகார்த்த விழா நடைபெறவிருக்கிறது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

இவ்விழாவின் முக்கிய அம்சங்களான மகேசுர பூசை, பேச்சுப்போட்டி, கவியரங்கு, கருத்தரங்கு, கலைநிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

## ...ிரயாணிகள் ...ங்கம் நன்றி

...யாழ்ப்பாணம், திங்கள்
...பம்- யாழ்ப்பாணம்
...லைவ விரைவில் நடை
...தற்கு உதவி செய்த
ம் எம் பி இ போ ச
ரி யாழ் மாநகர
வர் உடப்பு கிராம
தலைவர் யாழ் எம் பி,
மாநகர உறுப்பினர்
ற்றும் அனைவருக்கும்
ம்-யாழ்ப்பாணம் பஸ்
ணிகள் சங்கத்தின்
குழு நன்றி தெரிவித்
து. சங்கத்தின் காரிய
திரு சி சி இராசேஸ்
இந்த தகவலைத் தெரி
ர்.

# சிவராத்திரி

உடுப்பிட்டி, ஞாயிறு

தென் கருணை மக்கள் மன்றத்தினரால் மகாசிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளது. நாடகங்களும், கலைநிகழ்ச்சிகளும் அன்றைய தினம் இடம்பெறும்.

0 0 0

கரவெட்டி நாமகள் படிப்பகத்தினர் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 'அன்பூற்று' 'இலட்சியக் கன்னி' ஆகிய இரு நாடகங்களை ஒரே மேடையில் அரங்கேற்றவிருக்கின்றனர்.

0 0 0

நாவலப்பிட்டி, ஞாயிறு

நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலைய ஆதரவில் எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று காலை 7-30 முதல் மறுநாள் அதிகாலை 5 மணி வரை நாவலப்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் விசேட பூஜைகள், பக்திப் பாடல்கள், சமயச் சொற்பொழிவுகள். கதாப்பிரசங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

நான்கு சாமமும் முறையே திருமதி பொன்னம்மாள் கிருஷ்ணபிள்ளை, திரு கே பாலசுப்பிரமணியம் (வட்டார வித்தியாதிகாரி) திரு பி டி கிருஷ்ணசாமி, திரு க இலங்கைநாயகம் ஆகியோரது தலைமையில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவோர்: பாட்டு -திருமதி வசந்தா சுப்பிரமணியம், பேச்சு-புலவர் சிவசாமாட்சி, நடனம்-செல்வி ஜமுனா பொன்னையா பாட்டு-திரு மு தியாகராசா பேச்சு-பண்டிதர் சிவரத்தினம், பாட்டு-செல்விகள் ஜெயகௌரி, பத்மஜோதி, ரஞ்சிதவதன ராஜேந்திரம், பாட்டு-செல்வி ஐ இந்திராணி, பக்திப் பாடல்கள்-செல்விகள் சி பரமேஸ்வரி, சி அமிர்தநாயகி, பேச்சு-செ நாகேஸ்வரி, பாட்டு-திருமதி லலிதா கணேசன், கதாப்பிரசங்கம்-திரு வே கனகசபாபதி.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள்

உருத்திரபுரம் சிலாலயத்தில் சிவராத்திரி அனுட்டிக்கப்படும். விசேஷ அபிஷேக ஆராதனைகள், புராண படனம், இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். மறுநாள் காலை மகேஸ்வரபூசை நடைபெறும்

வவனிக்குளச் சிவாலயத் திருப்பணிச்சபையினர் மகாசிவராத்திரி விழாவை சிறப்பாகக் கொண்டாட ஒழுங்கு செய்துள்ளனர்.

இரவு விசேட பூசை, சொற்பொழிவு, கதாப்பிரசங்கம், வருடாந்தக் கூட்டம் முதலியனவும் நடைபெறும். (குவிம

— —

## கொள்வனவு நிலையங்கள்

கோட்டை, ஞாயிறு

நாட்டின் கிழக்குப் பகுதியில் 105 நெல் கொள்வனவு களஞ்சியங்களை விரைவில் நிறுவி விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசசங்கம் தீர்மானித்துள்ளது. ஆநேகமாக இந் நெற்களஞ்சியங்கள் மட்டக்களப்பு பகுதியிலுள்ள கிராமங்களில் நிறுவப்படவிருக்கின்றன

இவற்றில் 50 நெல் கொள்வனவு களஞ்சியங்களின் கட்டிட வேலைகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாகவிருக்கின்றன

# 'சாதிப்பாகுபாட்டை போக்க தொடர்ந்து போராடுவோம்'

— கோப்பாய் எம்.பி.

மாவிட்டபுரம், ஞாயிறு ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்த சமயத்தில் சமூகக் குறைபாடு ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றினார்களேதவிர அதை அமுல்நடத்தி பிரச்னைக்கு தீர்வுகாண முயலவில்லை. ஆனால் தமிழரசுக்கட்சிதான் சட்டம் இயற்றிய நாள் முதல் நீதிமன்றங்களில் வழக்காடி பிரச்னையை தீர்க்க போராடிவருகிறது.

இவ்வாறு கோப்பாய் எம் பி திரு சி கதிரவேற்பிள்ளை அளவெட்டிதெற்கில் நடந்த தமிழரசுக் கருத்தரங்கொன்றில் பேசுகையில் கூறினார்.

அளவெட்டி தெற்குதமிழரசுக்கிளை ஆதரவில் எஸ் சிறீமுருகன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- தமிழ் இனத்துக்கு பெரும் சாபக்கேடாக உள்ள தீண்டாமைப் பிரச்னையை தீர்க்கதமிழரசுக் கட்சி பாராளுமன்றத்திலும் நீதிமன்றங்களிலும் போராடிவருகிறது. எம்மால் அரசில் கொண்டுவரப்பட்ட தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை ஸ்ரீலங்கா அரசு அமுல் நடத்த முனையவில்லை நாம் அச்சட்டத்தை அமுல் நடாத்த நீதிமன்றங்களில் வழக்காடினோம் இதுபோல நீதிமன்றங்களில் போராடி சாதிப்பிரச்னையைதீர்க்க சட்டத்தில் உள்ள சிலபகுதிகள் வலுவற்று இருக்கிறபடியால் புதியதிருத்தம் செய்ய வேண்டியுள்ளது. இத்திருத்தங்களை நாம்ஏற்று சாதிவித்தியாசத்தை முற்றாகபோக்க தொடர்ந்து போராடுவோம் என்றார்.

உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம் செனட்டர் நடராசா, திரு சோ சேனாதிராசா உட்படப்பலர் இக்கருத்தரங்கில் உரையாற்றினார்கள்.

'உண்மையாக நடந்து கொள்ளும்

## ஆசிரியர் மீது கூடுமையாக நடந்து கொள்ளாதீர்'

யாழ்ப்பாணம், திங்கள் "உண்மையாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு உரிய மதிப்பளிக்கத் தவறினால் கல்வித்துறை மிகவும் பாதிக்கப்படும். கடுமையாக நடந்துகொள்ள வேண்டும் என்று சிலர் நினைத்துக்கொண்டு மனச்சாட்சியுடன் உழைக்கும் ஆசிரியர்கள் மீது தம் கைவரிசைகளைக் காட்டிவிடுவதால், இவ் வித போக்கினால் சலிப்புத் தட்டிவிடும் ஆசிரியர்கள் மனக்களைப்பு அடைந்து விடுகிறார்கள். இதனால் கல்வித்துறை பெரிதும் பாதிக்கப்பட்டு விடுகிறது. இதனை அனுபவரீதியில் நான் நன்கு உணர்ந்துள்ளேன்".

இவ்வாறு வல்வெட்டித்துறை, கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றி ஒய்வுபெற்ற திரு வி. செல்லையா கூறினார். மேற்படி பாடசாலையிலிருந்து ஒய்வு பெறும் திரு. செல்லையா, உதவி தலைமை ஆசிரியர் திரு ஆ. சுப்பிரமணியம், திருமதி ச. செல்லம்மா ஆகியோருக்கும் உதவி ஆசிரியராகக் கடமையாற்றி என்ஜினியரிங் படிப்புக்காக பாடசாலையிலிருந்து விலகிச் சென்ற திரு மு. திருஞானலிங்கத்துக்கும் பெற்றோர் ஆசிரியர் மாணவர்களால் நடத்தப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. செல்லையா மேற்கண்டவாறு கூறினார். பாடசாலை பதில் தலைமை ஆசிரியர் திரு கே. சினித்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு செல்லையா மேலும் பேசுகையில் கூறியதாவது:

உதவி ஆசிரியர்களின் நல்ல ஒத்துழைப்பு காரணமாகவே பாடசாலையின் நிர்வாகத்தை சீராக நடத்த முடிந்தது. பாடசாலையின் வளர்ச்சிக்கும் அதன் உயர்ந்த பெறுபேறுகளுக்கும் உழைத்த உதவி ஆசிரியர்களுக்கு எனது நன்றி என்றும் இருக்கும்.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளைச் சேர்ப்பதோடு தமது கடமை முடிந்து விட்டதென்று கருதாது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் முழுமையான அக்கறை காட்டவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பேற்படி பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினருக்கும் மாணவர்களுக்கும் திரு செல்லையா தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

திரு சுப்பிரமணியம் பேசுகையில் தமது பொறுப்பில் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு மாணவனையும் முடிந்தவரையில் உயர்ந்த நிலைக்கு கொண்டுவர முயல்வது ஒவ்வொரு ஆசிரியனினதும் முக்கிய பொறுப்பு என்றும் ஆசிரியன் ஓய்வெடுத்துக் கொண்டாலும் அவன் செய்தபணி ஒய்வெடுத்துக் கொள்வதில்லை யென்றும் குறிப்பிட்டார். திருமதி ச. செல்லம்மாவும் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்துக்கு நன்றிகூறினார்.

திரு சினித்தம்பி, ஒய்வு பெறும் தலைமை ஆசிரியர் யாரையும் நோகாமல் சிறப்பான நிர்வாகத்தை நடத்தி வந்தாரெனவும் உதவி தலைம ஆசிரியர் சேவையும் கடமையும் சேர்ந்து உருவானவர் எனவும் குறிப்பிட்டார். முன்னாள் தலைமை ஆசிரியர் திரு பொ. செல்லையா, திரு தங்கராசா உட்பட வேறுபலரும் பேசினர்.

(கு வி ம)

சினிமா விமர்சனம்

## விளையாட்டுப் பிள்ளை

எடுத்த எடுப்பிலேயே விறுவிறுப்பாக ஆரம்பமாகின்றது 'விளையாட்டுப் பிள்ளை'. இளமை துடிக்கும் வாலிப்பான உடற்கட்டோடு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 'சடுகுடு' மேடையில் தோன்றுகிறார்.

மாட்டுவண்டிச் சவாரியில் சிவாஜியோடு போட்டி போட்டு முந்தப்பார்க்கும் பத்மினி அவரது வாழ்க்கையோடு இணைந்தபின் அடங்கிப்போவது தமிழ்ப் பெண்களுக்கே உரியதோர் நற்பண்பினை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

கிராமத்தில் வசதியோடு வாழ்ந்துவரும் விளையாட்டுப் பிள்ளையான ஒருவாலிபனின் வாழ்க்கைப் பாதையில் விதிவிளையாடும் பாங்கினை சித்தரிப்பதாகக் கதை அமைந்திருக்கின்றது.

விளையாட்டுப்பிள்ளை முத்தையாவாக சிவாஜி கணேசனும், அவரைவிரும்பும் பண்ணையார் மகள் மரகதமாக பத்மினியும் தோன்றுகிறார்கள், சாதாரண கிராமத்தானாகவரும் சிவாஜி வசதியும் வாய்ப்பும் வரும்போது 'ராஜ' நடை நடந்து காட்டுவதையும், பிரமுகர்கள் மத்தியில் ஆங்கிலத்தில் பிரமாதமாக 'லெட்சர்' பண்ணுவதையும் அவசியம் பார்த்து மகிழ வேண்டும். யானையை அடக்குவதும் முரட்டுக்காளையை மடக்குவதும் சிறப்பான அம்சங்கள்.

முத்தையாவின் சித்தப்பாவாக டி. எஸ். பாலையா வந்து சக்கைபோடுபோடுகிறார். அத்துடன் 'சோ' வும் இருக்கிறார். சிரிப்புக்கும் குறைவில்லை.

மகாராஜாவின் தங்கையாக வரும் காஞ்சனாவின் துடிப்பான நடிப்பு பார்ப்பவரைச் சுண்டி இழுக்கின்றது.

காலஞ்சென்ற எஸ் எஸ் வாசன் அவர்களால் எழுதப்பட்ட திரைக்கதைக்கு ஏ. பி. நாகராஜன் வசனங்களை சிறப்பாக அமைத்திருக்கிறார்.

குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய நல்லதமிழ்ப் படம் ஜெமினியின் தயாரிப்பான 'விளையாட்டுப் பிள்ளை' யாழ்ப்பாணம் வின்சர் திரையில் இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கின்றது.

— ரசிகன்

## திவைப்பு வழக்கில் எதிரிகள் விடுதலை

முல்லைத்தீவு, ஞாயிறு திவைப்பு வழக்கில் சமாதான நீதிபதியும் மற்றயோரும் விடுதலை செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு கிராமசேவையாளர் பகுதியைச் சேர்ந்த சிலாவத்தையில் வசிக்கும் தம்பையா கந்தையா, கந்தையா சின்னத்துரை என்பவரின் வீட்டுக்கு 1968ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 28ம் திகதி தீவைத்ததாகவும் அவரின் உடைமைகட்கு நஷ்டம் விளைவித்ததாகவும்சிலாவத்தை வாசிகளான புண்ணியர்- பொன்னுத்துரை. பொன்னையா- துரைராசா, கந்தையா- ஆறுமுகம் மற்றும் முல்லைத்தீவைச்சேர்ந்த சமாதான நீதிபதியான கு. சுவக்கீன்பிள்ளை ஆகியோர் மீது முல்லைத் தீவுப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு மேலதிக நீதிபதி ஜனாப் ஏ. எம். ஐ. சகீட்முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது

விசாரணையின்பின் சாட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதால் எதிரிகளை விடுதலை செய்வதாக நீதிபதிகூறி எதிரிகளை விடுதலை செய்தார்.

தமிழ்ப்பொலிசார் ஏன் தமிழில் முறைப்பாடுகளைப் பதிவதில் பின்வாங்குகிறார்கள் என்பது தெரியவில்லையென்று நீதிபதி ஒருசந்தர்ப்பத்தில் கூறினார்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே வி. சண்முகநாதன் புரக்டர் கே, ஐயாத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானார். புரக்டர் யோகநாதன் முல்லைத்தீவுப்பொலிசாரின் உதவியுடன்வழக்கை நடத்தினார்.

## நிர்வாகிகள்

முல்லைத்தீவு, ஞாயிறு முல்லைத்தீவு கள்ளப்பாடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்க கூட்டம் தலைமையாசிரியர் பண்டிதர் நா. கந்தையா தலைமையில் கூடியது.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக கீழ்காண்போர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: பண்டிதர் நா. கந்தையா, உபதலைவர்கள்: திரு. அ. தி. வேலாயுதம், திரு. இ. செல்வநாயகம், இணைச்செயலாளர்: திரு. த குலேந்திரன், திரு. அ செல்வரத்தினம், பொருளாளர்; திரு. ஏ. இரத்தின சிங்கம்.

## கொழும்பில் நட்டியாஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள் அகில இலங்கை இளம் நடிகர் சங்கம் நடாத்தும் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி அடுத்தமாதம் 8-ம் திகதி மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர் செ. குமாரசூரியர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார் இவ்விழாவில் கலைஞர் வேல் ஆனந்தனுக்கு "நாட்டியக் கலாஜோதி" என்ற சிறப்புப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

யாழ் நகரைச் சேர்ந்த பன்னிரண்டு நங்கையர்கள் இவ்விழாவில் நடனவிருந்து அளிப்பர், விழாமலர் ஒன்றையும் நடிகர் சங்கத்தினர் வெளியிடுகின்றனர்.

## லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

பருத்தித்துறை ஞாயிறு பருத்தித்துறையில் கடமை யாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கெதிரான லஞ்சக் குற்றச்சாட்டைப்பற்றி இரகசிய பொலிஸ் உயர் அதிகாரி திரு. எஸ் வி மூர்த்தி கடந்த சில தினங்களாக பலரது சாட்சியங்களைப் பதிவு செய்து விசாரணை செய்து வருகிறார்.



கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031

# தமிழ்நாடு தேர்தல்களம்

# "நான் சுடப்பட்ட போது காமராஜர் எம். ஆர். ராதாவை ஏன் சந்தித்தார்?"

## எம். ஜி. ஆர். கிளப்பியுள்ள கேள்வி

சென்னை, பெப். 21. திருமதி காந்தியினுடைய அல்லது தி. மு. கழகத்தின் கூச்சல்களினுல் ஏமாந்துவிடவேண்டாம். அவர்கள் விட்ட பிழைகளை மறைக்கவே புதிய கோஷங்களைக் கிளப்புகிருர்கள் என்று நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் கூறிவருகிருர்.

நான்கு கட்சி கூட்டணி பதவிக்கு வந்தால் நேர்மையானவர்களால் நல்லாட்சி நடைபெறும். ஊழல்களுக்கு இடமே இருக்காது என்று அவர் கூறிவருகிருர்.

பயமுறுத்தல்களைக் கண்டு அஞ்சவேண்டாம் என்றும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

'நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து குறித்து நானும் ராஜாஜியும் ஒரே விதமாக கவலைப் படுகிறேம். இதைத் தேர்தலுக்காகநான்சொல்லவில்லை. ஒருவருடத்துக்கு முன்பு கூட நான் இப்படி எச்சரிகை விடுத்தேன்' என்று அவர் ஒரு கூட்டத்தில் கூறினர்.

நான் நினைத்தால் காமராஜரைக் கைது செய்யலாம் என்று திரு. கருணநிதி கூறியிருப்பது பற்றி திரு. காமராஜர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'உங்களால் முடியுமானல் செய்யுங்கள்! சிறைக்குப் போவதுபற்றி நான் அஞ்சவில்லை. விடுதலைப் போரின் போது பலதடவைகள் சிறையைக் கண்டவன்நான். இந்தப் பேச்சு நமது முதலமைச்சரதும் அரசாங்கத்தினதும் சின்னபிள்ளைத்தனத்தைத்தான் காட்டுகிறது:

தென்காசிகவில்லைக் குறிச்சிக்கு காமராஜர் வந்தபொழுது ஆயிரக்கணக்கான மக்கள் நள்ளிரவுவரைக் காத்துக் கொண்டு இருந்தார்கள்.

### பாப்பரசர் ஆசி

பாப்பரசர் புனித போல் காங்கிரஸ் தலைவர் காமராஜருக்கு ஆசி கூறி செய்தியொன்றை அனுப்பியிருக்கிருர்.

ஏழை மக்களுக்கு காமராஜர் செய்துள்ள சேவைகளை அவர் பாராட்டியிருப்பதுடன் பழைய காங்கிரஸ் தொடர்ந்து மக்களுக்கு சேவை புரியும் என்று நம்பிக்கையும் தெரிவித்தார்.

### எம் ஜி. ஆர். பிரசாரம்

தி. மு. கா. பொருளாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தமிழ் நாடெங்கும் சூருவளிச் சுற்றுப் பிரயாணம் செய்து தேர்தல் பிரசாரம் செய்து வருகிருர்.

கரம்பங்குடிப் பகுதிக்கு அவர் சென்றபோது நரிக்குறவர்கள் அவரை வழிமறித்து நடனமாடினுர்கள். குறவர்களும் குறத்திகளும் எம். ஜி ஆரைச் சுற்றிநடனமாடினுர்கள்.

எம். ஜி. ஆர். முன்தினம் 36 கூட்டங்களில் பேசினுர். காலை 10 மணிக்கு ஆதனகோட்டையில் பிரசாரத்தை தொடங்கிய அவர் நள்ளிரவு 1 மணிக்கு பொன்னமராவதியில் நடந்த கூட்டத்துடன் பிரசாரத்தை முடித்துக் கொண்டார்

தர்மபுரி மாவட்டத்தில் உத்தனபள்ளி தொகுதில் தி மு க அபேட்சகரா போட்டியிடும் டி ஆர் ராஜாராம், விபத்தில் சிக்கியதால் அவரின் கால் முறிந்தது. உடனேயே சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அமைச்சர் சத்தியவாணிமுத்து நேற்று வீதி வீதியாகச் சென்று ஓட்டுக் கேட்டார்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியின் சட்டமன்ற தி மு க அபேட்சகர் திரு இராஜரத்தினம், பாராளுமன்ற அபேட்சகர் திரு லட்சுமணன் ஆகியோர்களுக்காக நடிகர் அசோகன் நேற்று வீடு வீடாகச் சென்று ஓட்டுக் கேட்டார். நடிகர் தேங்காய் சீனிவாசனும், தி மு க அபேட்சகர்களை ஆதரித்து கிராமம் கிராமமாக பிரசாரம் செய்து வருகிருர்.

எம் ஜி ஆர் போட்டியிடும் பரங்கிமலை தொகுதியில் நேற்று முதல் அமைச்சர் கருணநிதி தேர்தல் பிரசாரம் செய்தார். அங்கு நடந்த கூட்டத்தில் முதல் அமைச்சர் பேசும் போது



கூறியதாவது: காமராஜர் கூறுகிருர் ஜனநாயகத்தை காப்போம் என்று. அவருடன் சேர்ந்து கொண்டு ராஜாஜியும் கூறுகிருர். அதுபோதாதென்று நடிகர் ஒருவரும் கூறிவருகிருர்.

ஜனநாயகத்திற்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? ஜனநாயகத்தின் குரல்வளையை பிடித்து நெரிப்பவர்யார்? உண்மையில ஜனநாயகத் தை காக்கும் கட்சி தி மு கதான். அதன் பொருளாளர் எம் ஜி ஆர் இத்தொகுதியில் போட்டியிடுகிருர். அவரை பல்லாயிரக்கணக்கான வாக்குகளால் வெற்றி பெறச் செய்ய வேண்டும்

அமைச்சர் நெடுஞ்செழியன் நேற்று திருவல்லிக்கேணிக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த போது திராவகபோத்தல் வீசப்பட்டது இதனுல் ஒருவர் காயமடைந்தார். அவர் ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் உடனடியாக அனுமதிக்கப்பட்டார்.

### பிரசாரநாடகம்

"இதோ ஒரு கோட்சே" என்ற தி மு க தேர்தல் பிரசார நாடகம் ஒன்றை தேங்காய் சீனிவாசன் நடாத்தி வருகின்றுர். இந்தநாடகத்தில் தேங்காய் சீனிவாசனும் நடிக்கிருர்.

### 51 கூட்டங்களில் பேசினுர்

தி மு க பொருளாளர் எம் ஜி ஆர் நேற்றுமட்டும் 51 கூட்டங்களில் பேசினுர். இவர் நேற்றுமுன் தினம் காலை 8மணிமுதல் நேற்றுக் காலை 8மணிவரை தொடர்ந்து தி மு க அபேட்சகர்களை ஆதரித்து கூட்டங்களில் பேசினுர். நெற்குரி என்ற இடத்தில் நடந்த கூட்டத்தில் எம் ஜி ஆர் கூறியதாவது: காமராஜர் கையைப்பலப்படுத்துவோம் என்று சிவாஜி கணேசன் கூறிவருகிருர். அவர்கைக்கு என்னகேடு வந்துவிட்டது. முதுக்குளத்தூரில் சுட்டுக்கொன்றுர்களே அந்தக் கையைப்பலப்படுத்தவா? கோ இ. மணியை அடித்து கொன்றுர்களே அந்தக் கையைப்பலப்படுத்தவா? நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன். என்னைக்கூட சுட்டார்களே நான் சுடப்பட்டு ஆஸ்பத்திரியிலிருக்கும் போது எம் ஆர் ராதவை அவரது வீட்டில் காமரஜார் எதற்காக கண்டார். என்ன அவசியம்வந்தது?

தம்பிகணேசன் புதிதாக ஊர் சுற்றி வருவதாக கேள்விப்பட்டேன் அதற்குக் காரணம் 8 மாதங்களுக்கு முன் எம் ஆர் ராதா மன்றம் திறக்க ஏற்பாடு செய்தார்கள். சிவாஜி கணேசன் மன்றங்களை கலைக்கும் சூழ்நிலை ஏற்பட்டது எங்கே தன்மன்றங்கள் போய்விடுமோ என்றுயோசனை செய்தார். பிழைக்கவேண்டாமா? காமராஜர் அதற்காக கையை பலப்படுத்துவோம் எனக் கூறிவருகிருர். இப்போ யாராவது எம் ஆர்: ராதா மன்றங்களை திறப்பதில்லை.

### சிவாஜியின் சூருவளி பிரசாரம்

சிவாஜிகணேசன் நேற்று முன்தினம் ரயில்மூலம் சென்னையிலிருந்து சேலத்துக்குத் தேர்தல் பிரசாரத்திற்காக புறப்பட்டார். ஏற்காடு செல்லும் வழியில், வழி நெடுக மக்கள் திரண்டு நின்று சிவாஜிக்கு வரவேற்பு அளித்தனர் சில இடங்களில் சிவாஜியின் காரை மறித்து மலர்மாரி பொழிந்தனர். நடிகர்திலகம் தமக்கு அணியப்பட்ட மாலைகளை அவர்களுக்கே திரும்பப் போட்டு மகிழ்ச்சி தெரிவித்தார். வழியில் பல கூட்டங்களில் கலந்து கொண்ட சிவாஜி, காமராஜர் கையைப் பலப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

ஏற்காட்டில் சிவாஜி 'ஹோட்டல் சேர்வராய்ஸ்' என்ற ஹோட்டலை திறந்து வைத்தார். இந்த விழாவுக்கு ஈவேகி சம்பத் தலைமை வகித்தார். ஹோட்டல் அதிபர் டி எம் எஸ் உடையார் தேர்தல் நிதிக்காக 200 ரூபாவை சிவாஜிகணேசனிடம் கொடுத்தார். சிவாஜி தினமும் பத்திற்கு மேற்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டு வருகிருர்.

### நானே அறிவாளி

முதல் அமைச்சர் கருணநிதி புதிதாக எழுதிய நானே அறிவாளி என்ற தேர்தல் பிரசார நாடகம் தமிழ் நாடுமுழுவதும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது இந்த நாடகத்தை பார்க்க மக்கள் திரள் திரளாக செல்கின்றனர்.

# '50 வருடங்களாக சம்பளத்தில்மாற்றமில்லையே'

## உப தபால் அதிபர்கள் கவலை

மட்டக்களப்பு, ஞாயிறு "உபதபால் அதிபர்களின் வாழ்க்கை ஏனைய அரசாங்க உத்தியோகத்தரிலும்பார்க்க மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களின் சம்பளம் கடந்த 50 வருடங்களாக மாற்றப்படவில்லை. கொலோனியல் ஆட்சியில் இருந்த அடக்குமுறைச் சட்டங்களை சுதந்திர இலங்கைக்கு ஏற்ற வகையில் மாற்றப்படவேண்டும். அரசியல் தலையீட்டின் காரணத்தால் நிர்வாகம் மிகவும் சீர்குலைந்த நிலையில் இருக்கின்றது இவற்றை ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிவர்த்திசெய்ய முனைந்திருப்பதைப் பாராட்ட வேண்டும்"

மட்டக்களப்பு கோட்டைமுனையில் நடைபெற்ற ஐக்கிய முன்னணி உபதபாலதிபர்களின் கிளைக்கூட்டத்தில் பேசிய செயலாளர் திரு ஐ நடராசா இவ்வாறு கூறினுர் சங்கத் தலைவர் திரு எச் அமரதுங்கா கூட்டத்துக்கு தலைமைவகித்தார்

நாட்டின் நன்மையைக் கருதும் யாவரும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சோஷலிசக் கொள்கையை அமுல்நடத்துவதற்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்று திரு வெ கதிர்காமத்தம்பி பேசுகையில் கூறினுர். தலைவர் திரு அமரதுங்கா பேசியதாவது:

"இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து உபதபாலதிபர்களின் பலமுக்கிய கோரிக்கைகளை தராவிட்டாலும்பரிசிலனைசெய்து வருகிறது. தொழிலாளர் நலன்கள் பாதுகாக்கப்படுமென்பது எமதுதிடமானநம்பிக்கை. புதிய நியமனங்களை அரசாங்கம் செய்யும்போது அரசியல் தலையீடு இருக்கக் கூடாது. சேவையில் உள்ள ஒருவரை நீக்கி இன்னுமொருவரை அந்த இடத்தில் வைப்பதினுல் வேலையில்லாப் பிரச்னை தீர்ந்துவிடாது"

தமிழ்ப் பகுதிகளில் பல் கலைக்கழகங்களை அமைக்கும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டிருக்கும் தபாலமைச்சர் திரு குமாரசூரியருக்கு சங்கத்தின் பாராட்டைத் தெரிவிப்பதென்ற தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

# மேற்கு வங்காள. . :

(3-ம் பக்கத் தொடர்ச்சி) அமைதியை நிலைநாட்டுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உறுதியாக எடுக்கமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சின்டிகேட் காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா இது பற்றித் தெரிவிக்கையில் நாட்டில் ஜனநாயகத்திற்கு ஆபத்து அதிகரித்துவருகிறது. இவ்வித கொலைச் சம்பவங்கள் வங்காளத்தில் அதிகரித்துவருவது வேதனைக்குரியது. கட்சித்தலைவர்களையும் தேசியவாதிகளையும் திட்டமிடுக் கொலைசெய்யும் ஓர் இயக்கம் பின்னணியில் இயங்கிவருவதாகவே கருதவேண்டியுள்ளது. இச்சம்பவங்களை மனதில் கொண்டு பார்க்கும்பொழுது வங்காளத்தில் நடக்கவிருக்கும் தேர்தல் ஜனநாயரீதியில் ஒழுங்காக நடைபெறுமா என்ற அச்சம் ஏற்படவே செய்கிறது என்றுர்.

### நீதி விசாரணை

ஹேமந்த குமார்பாசுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி முழு அளவிலான விசாரணை ஒன்றை மத்திய அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டுமென இந்திய போர்வார்ட்புளக் கட்சியின் பொதுக்காரியதரிசி மத்திய அரசுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

ஹேமந்திர குமார் பாசுவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில் மேற்குவங்காளத்திலுள்ள அரசஅலுவலகங்கள் யாவும்மூடப்பட்டது. போர்வார்ட் புளக்கட்சி ஆதரவாளர்களுக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களுக்குமிடையே கவுராவில் மோதல் ஏற்பட்டதால் பலர் காயமடைந்துள்ளனர்.

......

# தொழிலாளர் சம்மேளனத்தின் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், திங்கள் வடபிராந்திய கூட்டுறவுத் தொழிலாளர் சம்மேளனக்கூட்டத்தில்கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இக்கூட்டம் யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

1 கூட்டுறவுப்பரிசோதகர்களைத் தெரிவு செய்யும் போது கூட்டுறவுப்பயிற்சி பெற்றவர்களுக்கு புள்ளி கூடுதலாகக் கொடுக்கும்படியும் வயதுச் சலுகையும் கொடுக்கும்படியும் கோர வேண்டும்

2 இந்தோனேசிய விவகாரத்தில் அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்டிக்கவேண்டும்.

(கு வி ம)

# வடபகுதி விவசாயிகளுக்கு விற்பனை இலாகா அபயம்

## உபஉணவுகள் யாவற்றையும் விலைக்கு வாங்க முன்வருகின்றது

யாழ்ப்பாணம், திங்கள் 'வட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தக்காளிப் பழங்கள் முழுவதையும் கொள்முதல் செய்ய விற்பனை இலாகா தயாராக இருக்கிறது. இதுமட்டுமல்ல உருளைக்கிழங்கு மிளகாய் வாழைப்பழம் மற்றும் காய் கறி வகைகளையும் முட்டைகளையும் விற்பனை இலாகா கொள்முதல் செய்யும். ஆதலால் வட பகுதி விவசாயிகள் தாங்கள் உற்பத்திசெய்கிற பொருட்களை விற்பனை செய்ய முடியாதென அஞ்ச வேண்டியதில்லை.'

விற்பனை இலாகா உதவி ஆணையாளர் திரு. என் சிவசிதம்பரம் நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

படித்த வாலிபர்கள் துணிந்து விவசாயத்தில் ஈடுபடலாம். ஏனெனில் அவர்கள் எவ்வளவு அதிகமாக உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறார்களோ, அவ்வளவையும் கொள்முதல் செய்ய விற்பனை இலாகா தயாராயிருக்கிறது.

69-ம் ஆண்டு மட்டும் 8 லட்சம் ரூத்தல் தக்காளிப் பழங்களை விற்பனை இலாகா இங்கு கொள்முதல்செய்துள்ளது. இங்கிருந்து தினமும் 20,000 ரூத்தல் தக்காளிப் பழம் கொழும்புக்கு அனுப்பப்படுகிறது கடந்த வருடம் மழை காரணமாக 4 லட்சம் தக்காளிப்பழங்கள் மட்டுமே கொள்முதல்செய்யப்பட்டன. இவ்வருடம் பெருந்தொகையான தக்காளிப்பழங்களைக் கொள்முதல் செய்ய முடிவுசெய்துள்ளோம். யாழ். விளை பொருட்களுக்கு வியாபாரச் சந்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்

தக்காளிப் பழத்தின் விலையை ரூத்தல் 20 சதத்திலிருந்து 30 சதத்திற்கு அதிகரித்துள்ளோம். தையிட்டி, வசாவிளான், மயிலிட்டி, பலாலி, சுன்னாகம் மல்லாகம், மாவிட்டபுரம் ஆகிய இடங்களில்கூட்டுறவுசங்கங்கள்மூலம் கொள்முதல்செய்கிறோம் விவசாயிகளுக்கு இது ஒருவரப்பிரசாதமாகும் தக்காளிப்பழத்திற்கான பணம் உடனே கொடுக்கப்படுகிறது

நீர்வேலி சங்கத்திலிருந்து வாரத்திற்கு 3 நாட்கள் 24,000 ரூத்தல் வாழைப் பழங்களை கொள்முதல் செய்கிறோம் 1 பழம்நாலரை சதவிதம் கொள்முதல்செய்கிறோம். ஒட்டிசுட்டான் முல்லைத்தீவு ஆகிய இடங்களிலிருந்து பெருந்தொகையான சாம்பல் வாழைக்குலைகளை கொள்முதல் செய்கின்றோம். உருளைக்கிழங்கு. மிளகாய் கத்தரிக்காய் மற்றும் காய்கறிகளையும் பெருந்தொகையாக கொள்முதல் செய்து வருகிறோம்.

வடபகுதி விவசாயிகளுக்கு உப உணவு பொருட்களை விற்பனைசெய்வதில்ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் விற்பனை இலாகாவுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

---

பாலை தீவுக்கருகில்

## 30 மூடை கராம்புடன் வள்ளம் பிடிபட்டது

யாழ்ப்பாணம், திங்கள் பாலைதீவுக்கு அண்மையிலுள்ள கல்முனைக்கடலில் வைத்து 30 மூடை கராம்புடன் ஒருவள்ளத்தை ஊர்காவற்றுறை சுங்கப்பகுதியினர் கைப்பற்றியுள்ளனர். இப்பொருள்களின் பெறுமதி சுமார் 1 லட்சம் ரூபாவாக இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை உதவிக் கலக்டர் திரு. கனகசபையின் தலைமையில் சென்ற கோஷ்டி, கள்ளக்கடத்தல் பொருட்களுடன் சனிக்கிழமை இரவு கைப்பற்றிய வள்ளத்தில் 5 பேர் இருந்தனர் இதுபற்றி வடபகுதி உதவி சுங்க அதிபர் திரு. செனவிரத்தின விசாரணை செய்து வருகிறார்,

கடற்படையினர் இன்னொரு வள்ளத்தை 14 மூடை கராம்புடன் கைப்பற்றியுள்ளனர்.

---

## வடக்கில் எண்ணெய் வளம் இருப்பது ஊர்ஜிதம்

கோட்டை, திங் இலங்கையின் வடபகுதியில் எண்ணெய் வளம்இருப்பதை இப்போது இலங்கையில் உள்ள ரஷ்ய நிபுணர் குழு ஊர்ஜிதம் செய்துள்ளது. வடக்கில் பேசாலை, மன்னார். ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் எண்ணெய் வளம் இருக்கும் சாத்தியக் கூறுகள் தெரிவதாக நிபுணர்குழுவின் தலைவரான பேராசிரியர் என் காலினின் தெரிவித்தார்,

எண்ணெய் வளம்பற்றிய அகழ்வு ஆராய்ச் இன்னும் மூன்று மாதத்திற்குள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சோவியத் நிபுணர்கள் வடபகுதியின் கரையோரப்பகுதிகளில் தமது தீவிர ஆராய்ச்சி வேலைகளை முடித்திருக்கின்றார்கள்.

ஏற்கனவே பிரான்சிய நிபுணர்கள் நடாத்திய ஆராய்ச்சியின் பெறுபேறுகள் பற்றிய அறிக்கையை ரஷ்ய நிபுணர்கள் ஆராய்ந்ததோடு அதில் சில திருத்தங்களையும் செய்துள்ளனர்.

ஆரம்பமாக இருக்கும் அகழ்வு ஆராச்சிகள் குறிப்பிட்ட பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய எண்ணெய் வர்த்தகரீதியில் பயனளிக்கக் கூடியதா என்பதுபற்றியும் இதில் பெருந் தொகைப் பணத்தை முதலீடு செய்யலாமா என்பதுபற்றியும் முடிவெடுக்க உதவும்.

---

கிழக்குப்பல்கலைக்கழகம்:

## 'மக்களின் ஆலோசனைகளைக் கேட்டறிந்து விட்டேன்'

பாண்டிருப்பு, ஞாயிறு "யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் சம்பந்தமான எனது பணிகளை நிறைவேற்றிவிட்டேன். இப்போது என் கவனமெல்லாம் கிழக்குமாகாணம் பற்றியதே" என்று தபாலமைச்சர் திரு. குமாரசூரியர் கூறினார். எமது நிருபருக்கு அளித்த பேட்டியின் போது அமைச்சர் மேலும் கூறியதாவது:

"இங்குள்ள பாடசாலைகளின் தரம் உயர்த்தப்படல் வேண்டும். இதன் அவசியத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் நான் வலியுறுத்தியிருக்கிறேன். கிழக்கிலங்கையின் தமிழ்பிரமுகர்களைச் சந்தித்து பல்கலைக் கழகம் சம்பந்தமான ஆலோசனைகளைக் கேட்டறிந்துள்ளேன். 'கிழக்கு' பல்கலைக் கழகம் சம்பந்தமாக எனது பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கலாம். ஏனைய மாகாணங்களோடு ஒத்துப்பார்க்கையில் கிழக்கு மாகாணம் மிகவும் பின்தங்கிய நிலையில் காட்சியளிப்பதைக் கண்டு வருந்தமடைகின்றேன். கிழக்கின் அபிவிருத்திக்காக மக்கள் எழுச்சி கொண்டு முற்போக்கு இயக்கங்களை ஸ்தாபித்து அதன்மூலம் மாகாணத்தில் புரட்சிகர அபிவிருத்தியை ஏற்படுத்துவார்களென நம்புகிறேன்"

---

### பசுப்பால் கொள்வனவு

கோட்டை, ஞாயிறு கிழக்கு மாகாணத்தில் உற்பத்தியாகும் பசுப்பால் முழுவதையும் தேசிய பால் சபை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. இதையொட்டி தேசிய பால்சபை டென்மார்க்கிலிருந்து பால் பதனிடும் இயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளது. இந்த இயந்திரங்கள் தம்பன்கடுவையில் உள்ள கட்டிப்பால் உற்பத்தித் தொழிற்சாலையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்திலுள்ள செங்கலடி, அக்கரைப்பற்று, பொத்துவில், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பால் சேர்க்கும் நிலையங்களை தேசிய பால் சபை நிறுவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

### 337-வது குலுக்கல்

கோட்டை, ஞாயிறு தேசியலொத்தர்சபையின் 337.வது சீட்டிழுப்பு இம்மாதம்24ம்திகதிமாலை5மணிக்கு கம்புறுட்டியா கிராம சபைமைதானத்தில் நடைபெறவுள்ளது. இச் சீட்டிழுப்பில் பரிசுபெறுபவர்களின் டிக்கட்டுகளுக்கான பணம் மார்ச் முதலாம் திகதி கொழும்புகாலிவீதியிலுள்ள தேசியலொத்தர்சபைக்காரியாலயத்தில் காலை 10-30மணிக்கு வழங்கப்படும்:

---

### யோசனை பலித்தது

பருத்தித்துறை, ஞாயிறு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மகளிர் கல்லூரியில் அரிவரிவகுப்பு மாணவருக்கு இடமில்லையென்பதை வடமாநிலக் கல்வியதிபதி திரு. டபிள்யூ. டி. மகாதந்திலாவிடம் பேட்டிகண்டு சுட்டிக்காட்டிய பெற்றோருக்கு கல்வியதிபதி ஒரு சுலபமான வழியைக் காட்டினார்,

இடமின்றித் தவிக்கும் 37 குழந்தைகளுக்கும் பெற்றோர் ஒன்று திரண்டு ஒரு வகுப்பறையைக் கட்டிமுடித்தால் ஆசனங்களையும் ஆசிரியரையும் தான் தந்துதவுவதாக அவர் பெற்றோரிடம் கூறினார். இதையடுத்து இரு வாரங்களில் ஒருவிசாலமான கட்டடம்உடுப்பிட்டிமகளிர் கல்லூரியில் தலைதூக்கியது. நியாயவாதியான ஒரு பெற்றோர் மட்டும் ரூபா 1000 இக்கட்டடநிதிக்கு உடனடியாக உதவினார்.

---

### வேடிக்கைகாட்டி சங்கிலியை அறுத்தாராம்

யாழ்ப்பாணம், திங்கள் வீட்டுவாசலில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையொன்றுக்கு வேடிக்கை காட்டிவிட்டு அதன் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டோடிய ஒருவர் குருநகர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. தாமோதரம்பிள்ளையிடம் கையும் மெய்யுமாகச் சிக்கிக் கொண்டார்.

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத்தெருவில் பட்டப்பகலில் இந்ததுணிகரத் திருட்டுச்சம்பவம் நடந்தது குருநகர் பொலிஸார் பிரஸ்தாப நபரை மேலும் விசாரணை செய்தபோது பல சைக்கிள் களவும் அம்பலமாகினவாம் திருட்டுப் போனசங்கிலியும் வேறுசில பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன: (உடுப். நி)

---

### சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் கடையிற் சுவாமி கோவிலில் நாளை மகா சிவராத்திரிவிழா நடைபெறும்.

அபிடேக ஆராதனையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் கதாப்பிரசங்கம், கவியரங்கம், மெல்லிசை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

---

### தகனம்

கல்கத்தா, பெப். 21 இந்திய போர்வார்ட் புளக் தலைவர் திரு. கேமந்த குமார் பாசுவின் சடலம் இன்று கல்கத்தாவில் தகனம்செய்யப்பட்டது. இவர் குத்திக் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

---

### கீரிமலை சிவன் தேர்த்திருவிழா

மாவிட்டபுரம், ஞாயிறு சைவர்களின் புனிதஸ்தலமாக விளங்கும் கீரிமலை சிவன் தேவஸ்தான தேர் உற்சவம் இம்மாதம் 23-ம் திகதி நடைபெறஇருக்கிறது.

23-ம் திகதி காலை தேர் உற்சவம் முடிந்ததும் சிவராத்திரி புண்ணிய தினத்தை அடுத்து இரவு முழுவதும் நாலுசாமப் பூஜைகளுடன் விசேட புராண சொற்பொழிவுகள் புராணபடனம் ஆதியவற்றுடன் மகாசிவராத்திரி கொண்டாடப்பட்டு மறுநாள் சமுத்திரத் தீர்த்தமும் நிகழவிருக்கிறது.

---

ஆஸ்பத்திரி செயற்குழு

### புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், திங்கள் இளைப்பாறிய உதவி வைத்திய அதிகாரியும் தற்போது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கடமையாற்றுபவருமான திரு. நல்லையா மூத்ததம்பி 1-1-71 தொடக்கம் யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரி செயற்குழு உறுப்பினராக சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

### ஓய்வுபெறும் ஆசிரியர்க்கு பாராட்டு

மாவிட்டபுரம், ஞாயிறு வருங்கால சமுதாயத்தை நல்லமுறையில் அமைக்கும் பொறுப்பு ஆசிரியர்கையில்தான் உள்ளது. இங்கு ஓய்வு பெறும் 6 ஆசிரியர்களினதும் அரிய சேவையை எதிர்கால சமுதாயத்தினர் மறக்கமாட்டார்கள்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின்உபஅதிபர்திரு. சி. ஈ. இராசலிங்கம் ஆசிரியர்கள் திருவாளர்கள் சி. சின்னத்தம்பி. எஸ். இராமலிங்கம், வி. இராசையா. எஸ். இராசரத்தினம். திருமதி. ரி. தம்பிஐயா ஆகியோருக்கு கல்லூரி பழையமாணவர் சங்கத்தால் அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தில் உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

---

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 22-ந் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.